வளர் தமிழ் 5 6 7 8

வாசிப்போம்



தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

வளர் தமிழ்

5 6 7 8

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

நூலமைவு விளக்கம்

நூற்பெயர் : வளர் தமிழ் 5,6,7,8 வாசிப்போம்

நூலாக்கம் : தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

பக்கங்கள் : 96

நூல் வடிவமைப்பு : செ.சுஜீகரன்

செய்திட்ட நிறைவேற்றுநர் : நகுலேசுவரி அரியரத்தினம்

பதிப்புரிமை : தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

முதற்பதிப்பு : 2015

Published by :
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
1st published 2015

Printed in France

முன்னுரை

வாசிப்பதால் மாந்தன் முழுமையடைகின்றான்.

இப்பொன்மொழிக்கு இணங்க மொழியின் ஒரு கூறான வாசிக்கும் ஆற்றலை மாணவரிடையே வளர்க்கும் நோக்குடன் இந்நூல் வெளியிடப்படுகிறது. புலம்பெயர் தேசத்தில் மலர்ந்த எம் சிறார்கள் தமது தாய்மொழியான தமிழைக் கற்பதற்கும் அதன் சுவையை அறிவதற்கும் தமது இன அடையாளங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்து கொள்வதற்கும் வாசிக்கும் ஆற்றல் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இதனைக் கருத்தில் கொண்டே மழலைகள் முதல் பெரியோர் வரை தங்கள் வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை இந்நூலை அணியஞ் செய்துள்ளது. வாசிக்கும் போது எழுத்துகளைக்கூட்டிச் சொற்களைப் பலுக்கி எளிதாக வாசிக்கும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் அறிவியல் சார்ந்த பல செய்திகளையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. வெறுமனே வாசிப்புப் பகுதியாக மட்டும் அமையாது வாசிப்போர் மனதில் நற்கருத்துகளை நிலை நிறுத்தும் அறிவுப் பெட்டகமாகவும் இந்நூல் அமைந்துள்ளது. சிறுவர் முதல் பெரியோர்வரை இந்நூலை வாசித்துப் பயன்பெறலாம்.

எங்கே ஒரு நூல்நிலையம் திறக்கப்படுகின்றதோ
அங்கே ஒரு சிறைக்கூடம் மூடப்படும்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழே எங்கள் உயிர்

உள்நிரல்

வாசிப்போம்

தமிழே எங்கள் உயிர்

வளர் தமிழ் 5

வாசிப்போம்

வாசிப்போம்



பாரி

பண்டைக்காலத்திலே தமிழ்நாட்டில் பாரி என்ற ஒரு மன்னன் இருந்தான். அவன் உயிர்களிடத்தில் அன்புள்ளவன். அவனை எல்லோரும் வள்ளல் பாரி என்று அழைப்பர். பாரி பறம்பு மலைக்கும் அதைச் சூழவுள்ள முந்நூறு ஊர்களுக்கும் மன்னன். அவனது புகழ் கேட்டுப் பொறாமை கொண்ட மூவேந்தர் பாரியைக் கொன்று அவனது அரசைக் கைப்பற்றினர். பாரியின் மகள்மாரான அங்கவையும் சங்கவையும் கபிலர் என்ற புலவரால் காப்பற்றப்பட்டு மறைவாக வாழ்ந்தனர். ஒரு நாள் ஔவையார் பாரி மகளிரின் குடிசைக்கு வந்தார். அங்கவையும் சங்கவையும் தங்களது வறுமையையும் எண்ணாது பாட்டி ஒருவர் பசித்து வந்திருக்கிறாரே என்று எண்ணித் தினைமாவிலே உணவு சமைத்துப் பரிவுடன் உண்ணக் கொடுத்தனர். ஔவையார் அவ்வுணவை உண்டு மகிழ்ந்தார்.

வாசிப்போம்



குருவிக்குஞ்சுகள்

குருவி ஒன்று மரக்கிளையில் கூடு கட்டியது. அக்கூட்டில் முட்டைகளை இட்டு அடைகாத்துக் குஞ்சுகள் பொரித்தது. குஞ்சுகள் மிகவும் சிறியனவாக இருந்தன. அவற்றுக்கு இறக்கைகள் முளைக்காததால் கூட்டிலேயே இருந்தன. தாய்ப்பறவை நாள்தோறும் இரைதேடிக் கொண்டு வந்து குஞ்சுகளுக்குக் கொடுக்கும். சில நாட்கள் சென்ற பின் குருவிக் குஞ்சுகளுக்கு இறக்கைகள் முளைத்தன. நீங்களும் பறக்கக் கற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுதுதான் நீங்கள் விரும்பிய உணவைத்தேடி உண்ண முடியும் என்று தாய்ப்பறவை கூறியது. அவை மெல்லமெல்லப் பறக்கத் தொடங்கின. ஒரு நாள் குஞ்சுகள் இரை தேடக் கூட்டை விட்டுப் பறந்து சென்றன. அதைக் கண்ட தாய்ப்பறவை மகிழ்ந்தது.

வாசிப்போம்



பாரதியார்

சுப்பிரமணிய பாரதியார் சிறந்த தமிழ்ப் புலவர். இவர் தமிழ்நாட்டில் எட்டயபுரம் என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தையாரின் பெயர் சின்னச்சாமி, தாயார் இலக்குமிஅம்மாள். பாரதியார் மெலிந்த உருவமுடையவர். இவர் இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளைக் கற்றார். இம் மொழிகளில் தமிழிலேயே அதிக விருப்பம் கொண்டார். பாரதியார் பல பாடல்களைப் பாடியுள்ளார். இவருடைய பாடல்களைச் சிறுவர்களும் பெரியவர்களும் விரும்பிப் படிப்பர். விடுதலை, இயற்கை, புதுமைப்பெண், போன்ற பல பாடல்களை எழுதினார். பெண் விடுதலைக்காகப் பாடுபட்டார். அச்சம்தவிர், உடலினை உறுதிசெய், எண்ணுவது உயர்வு, ஏறுபோல் நட எனப் பாரதியார் எல்லோருக்கும் கூறுவார். அனைவருடனும் இனிய மொழியில் பேசுவார். இவர் ஏழை மக்களுக்குப் பல உதவிகளைச் செய்தார்.




வாசிப்போம்

டைட்டானிக்

உலகத்தில் ஏற்பட்ட கப்பல் திடுநேர்கையில் (விபத்தில்) மிகவும் பரபரப்பானதும் இன்றளவும் பேசப்படுவதுமான ஒரு நிகழ்வு டைட்டானிக் கப்பல் திடுநேர்கைதான். பெல்பாட் நகரில் 1911ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இக்கப்பல் இங்கிலாந்தின் சவுத்தாம்டன் நியூயோர்க் நகரங்களுக்கிடையே தனது முதல் செலவை (பயணத்தை) மேற் கொண்டது. அப்போது இக்கப்பலில் 2240 பேர் இருந்தனர். இது முதன் முதலில் பிரான்சு நாட்டில் உள்ள செர்போர்க் நகரை நோக்கிப் புறப்பட்டது. இது ஒரு நீராவிக் கப்பல் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கப்பல் வடக்கு அட்லாண்டிக் கடலில் சென்று கொண்டிருந்தபோது பனிப்பாறையில் மோதிக் கடலில் மூழ்கியது. இக்கப்பலின் முதற் செலவே தோல்வியில் முடிந்தது. இதிலிருந்து 705 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர். இந்நிகழ்வு என்றுமே யாராலும் மறக்க முடியாத ஒரு துயர நிகழ்வாகும்.

வாசிப்போம்



இயற்கைக்காட்சி

மலர் நிறைந்த பொய்கையும் விண்மீன் நிறைந்த வானமும் எப்பொழுதும் கவிஞர் மனதைக் கவரும் இயற்கைக் காட்சிகளாகும். காலையிலே தோன்றும் கதிரவன் ஒளியில் களித்து விரியும் தாமரை மலரைக் காணும் பொழுது கவிஞரின் உள்ளமும் மலரும். நீல வானத்திலே கதிரவன் ஒளிவீசி எழுகிறான். கண்களைக் கவரும் அழகு வாய்ந்த தாமரை மலர்களைச் சுற்றித் தேன் எடுப்பதற்காக வண்டுகள் பறக்கின்றன. கதிரவன் ஒளியால் இதழ் விரித்த செந்தாமரை மலரில் வெள்ளை அன்னம் ஒன்று இனிதாக அமர்ந்திருக்கின்றது. நீரலைகள் அந்தச் செந்தாமரையை ஆட்டி அசைக்கின்றன. அன்னம் குழந்தைபோல் அந்த இனிய மலரில் துயில் கொள்கிறது. இக் காட்சியைப் பார்த்த கவிஞரின் உள்ளம் மகிழ்ச்சி அடைகின்றது. அவரது மனதில் கவிதை பிறக்கிறது.

வாசிப்போம்



அரசனும் ஏழையும்

இலங்கையிலே உள்ள பெரிய ஆறு மகாவலி. இதன் கரையிலுள்ள ஒரு சிறிய குடிசையில் வீரன் என்னும் பெயருடைய ஏழை ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் நற்குணமும் நற்செயலும் உடையவன். ஒரு நாள் அவன் வேலை செய்யும்போது, 'நான் ஒருவரோடும் பொறாமை கொள்ளேன்.' என்மீதும் ஒருவரும் பொறாமை கொள்ளார். எனக்கு கவலையில்லை, நோயில்லை என் மனைவி பிள்ளைகளோடு ஒற்றுமையாக வாழ்கிறேன் என்ற பொருள்பட ஒரு பாடலைப் பாடினான். இப்பாடலைக் கேட்ட ஓர் அரசன் அருகில் வந்து "நான் உன் மீது பொறாமை கொள்கிறேன்" என்றான். உன்னைப் போல் மகிழ்ச்சியும் ஆறுதலும் எனக்கில்லை. ஆனால் நீ நாளும் இன்பமாக இருக்கிறாய். அதற்குக் காரணம் உனது சிறந்த மனமே என்பதை நான் உன்னிடமிருந்து அறிந்து கொண்டேன் எனக் கூறினான். வீரன் அதனைக் கேட்டு மகிழ்ந்தான். அரசன் வீரனைப் பாராட்டினான்.

வாசிப்போம்



புலி

இயற்கை எண்ணற்ற உயிரினங்களைப் படைத்துள்ளது. அவை பறப்பன, நடப்பன, நீர்வாழ்வன எனப் பல வகையின. விலங்குகள் இயற்கை கொடுத்த கொடையாகும். இவை மாந்தர் வாழ்வோடு மிகவும் தொடர்புடையன. இவ்விலங்குகளில் புலி குறிப்பிடத்தக்கதாகும். புலிகளில் வேங்கைப்புலி, சிறுத்தைப்புலி, கரும்புலி எனப் பல வகையுண்டு. புலிகளில் முதன்மையானது வேங்கைப்புலியாகும். இது அஞ்சாமையும் வலிமையும் உடையது. மற்ற விலங்குகளைப் போன்று பிற விலங்குகள் வேட்டையாடியதை இது பறித்து உண்ணாது. தானே வேட்டையாடி உண்ணும். வேங்கைப் புலி பெரிய யானையையே எதிர்த்துத் தாக்கும் பலங் கொண்டது. தமிழீழத்தின் தேசியக்கொடி புலிக்கொடியாகும்.






கல்வி

மக்கள் பெறவேண்டிய செல்வங்களுள் முதன்மையானது கல்விச் செல்வம். பணம், பொன், பொருள் முதலிய செல்வங்கள் எளிதில் அழியக்கூடியவை.

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை

திருவள்ளுவர் இக்குறளில் அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே என்பதைக் கூறுகின்றார். கல்வி கற்பதற்கு இளமைப்பருவமே ஏற்றகாலமாகும். இளமைக் காலத்தில் கற்கும் கல்வியே பசுமரத்தாணிபோல மனதில் நன்கு பதியும். "இளமையிற் கல்" என்று ஔவையாரும் கூறியிருக்கின்றார். கல்வி கற்கும்போது கடினமாகத் தோன்றலாம். அதைக் கண்டு மாணவர்கள் மனங்கலங்கக் கூடாது. முயற்சியுடன் படித்து முன்னேற வேண்டும். கல்விச் செல்வமுடைய ஒருவனாற்றான் ஏனைய செல்வங்களை எளிதிற் பெற முடியும். ஒருவனுக்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்புத் தருவதும் இக் கல்வியே! மாணவர்களாகிய நீங்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமையைத் தேடித்தர அயராது இக்கல்வியைக் கற்க வேண்டும்.

வாசிப்போம்



தூய்மை

''கூழானாலும் குளித்துக் குடி'' ''கந்தையானாலும் கசக்கிக் கட்டு'' என்பது எம் முன்னோர் கூறியுள்ள பழமொழிகள். நாம் வேலை செய்யும் போதும் விளையாடும் போதும் எமது உடல் வியர்க்கிறது. அது காய்ந்து அழுக்காக உடலில் தங்குகின்றது. அதனால் நாம் நாள் தோறும் குளித்து உடலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இரவு தூங்க முன்னரும் காலையில் எழுந்தவுடனும் பல் துலக்க வேண்டும். நகங்களை அழுக்குச் சேரவிடாமல் வெட்டுதல் வேண்டும். அவ்வாறே நாம் அணியும் ஆடைகளையும் நன்கு துவைத்து அழுக்கைப் போக்குதல் வேண்டும். ஏனெனில் ஆடையில் இருக்கும் நோயை உண்டாக்கும் நுண்ணுயிரிகள் எம் உடலைத் தாக்கும். இதனால் எமக்கு நோய்கள் பலவும் வந்து சேரும். எனவேதான் கிழிந்த உடையானாலும் துவைத்த பின்னரே அணியும்படி கூறப்படுகின்றது.

வாசிப்போம்



வீட்டுத்தோட்டம்

வீட்டுத்தோட்டம் மிகவும் பயனுள்ள ஒன்றாகும். இதனால் பலரும் வீட்டுத் தோட்டத்தை விரும்புகின்றனர். வீட்டுத்தோட்டம் செய்தல் ஒரு சிறந்த பயனுள்ள பொழுதுபோக்காகும். அத்துடன் தோட்டத்தில் காய்கறிவகைகள், கீரைவகைகள், பழவகைகள் என்பவற்றைப் பயிரிடுவதன் மூலம் புத்தம்புதிய காய்கறிகள், கீரைவகைகள், பழங்கள் என்பனவற்றை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் காய்கறிகளுக்காக நாம் செலவு செய்யும் பணத்தினை மீதப்படுத்தலாம். வீட்டுத்தோட்டம் செய்தல் ஒரு சிறந்த உடற்பயிற்சியாகவும் அமைகின்றது. ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிப்பதற்கும் வீட்டுத்தோட்டம் பெரிதும் உதவுகின்றது.

வாசிப்போம்



விலங்கு


விலங்குகளில் காட்டு விலங்குகள், வீட்டு விலங்குகள் என இரு வகை உண்டு. சிங்கம், புலி, கரடி போன்றன காட்டு விலங்குகள். பூனை, நாய், ஆடு, மாடு போன்றன வீட்டு விலங்குகள் ஆகும். ஆ எமக்குப் பால் தருகின்ற ஒரு பயனுள்ள விலங்கு. ஆ புல்லைத் தின்னும். புல்லைக் கடித்து அப்படியே விழுங்கி விடும். பின்னர் ஓர் இடத்தில் போய்ப் படுத்திருந்து தான் முதலில் கடித்து விழுங்கிய புல் உருண்டையை மீண்டும் வாய்க்குள் கொண்டு வந்து அதை நன்றாக மென்று தின்னும். இதனை ‘அசைபோடுதல்’ என்பர். ஆவில் இருந்து கிடைக்கும் பால் மிகவும் சத்து நிறைந்த உணவாகும். காய்ச்சிய பாலை உறைபோட்டுத் தயிராக்குவர். தயிரில் இருந்து மோர், வெண்ணெய், நெய் என்பனவற்றைப் பெறுவர். பால் தயிர் மோர் வெண்ணெய் நெய் என்பன ஆனைந்து என அழைக்கப்படும்.



காலை நேரம்

காலை நேரம் மிகவும் சுறுசுறுப்பான நேரம். பறவைகளின் இசை ஒலியுடன் காலை விடியும். பள்ளி செல்லும் பிள்ளைகள் துயில் நீங்கி எழுவர். தங்கள் காலைக் கடன்களை முடிப்பர். உணவு உண்டு தங்கள் புத்தகப் பைகளைத் தூக்கிக் கொண்டு தெருவில் இறங்கி நடப்பர். பெற்றோர், தங்கள் குழந்தைகளைக் காப்பகத்தில் விட்டுவிட்டுத் தாங்கள் தொழிலுக்குச் செல்வதற்காக மிகவும் விரைவாகச் செல்வர். பணிகளுக்குச் செல்பவர்களை ஏற்றிக் கொண்டு சிற்றுந்தும் பேருந்தும் தெருவில் விரைந்து செல்லும். எங்கும் விரைவு; எதிலும் விரைவு; அந்த விரைவான நேரத்திலும் கூட காண்போருக்கு வணக்கம் கூறுவர். இக்காட்சிகளைத் தாங்கியபடி காலை நேரம் விறுவிறுப்பாகச் சென்று கொண்டிருக்கும்.

வாசிப்போம்



வாழை

வாழை மிகவும் பயனுள்ள மரம். அதற்குக் கிளைகள் இல்லை. வாழையில் கப்பல், கதலி, மொந்தன், இதரை செவ்வாழை போன்ற பல இனங்கள் உண்டு. வாழைத்தண்டு கறி சமைக்க உதவும். வாழை மடலைக் காயவைத்து நார் உரிப்பர். இந்நாரில் பூமாலை கட்டுவர். வாழை ஒரு முறைதான் குலைபோடும். வாழைக் குலையில் காய்கள் சீப்புச்சீப்பாக இருக்கும். வாழையின் அடியில் உள்ள கிழங்கில் இருந்து புதிய வாழைக்கன்றுகள் தோன்றும். வாழைப்பழம் மிகவும் இனிமை நிறைந்த பழமாகும். இதிற் பல வகைச் சத்துகளும் நிறைந்துள்ளன. வாழைப்பழம் முக்கனிகளில் ஒன்றாகும். தமிழர் வாழ்வில் வாழை மிகச் சிறந்த இடத்தைப் பெறுகின்றது. வாழையை வளர்ப்போம். வளம் பெறுவோம்.

வாசிப்போம்



மக்கட்பண்பு

இவ்வுலகில் எத்தனையோ வகையான உயிரினங்கள் உள்ளன. மாந்தர், பறவைகள், விலங்குகள் என்று அவை எண்ணில் அடங்கா. அவை எல்லாவற்றுள்ளும் சிறந்தது மாந்த இனமே! பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற மாந்தன் நல்ல மாந்தனாக வாழவேண்டும். மாந்தனை நல்லவனாக வாழவைப்பது நற்குணங்களும் நற்செயல்களுமே. அன்பு என்னும் உயர் குணம் நற்செயல்களுக்கும் நற்குணங்களுக்கும் அடிப்படையாக விளங்குகின்றது. குடும்பம், உற்றார், அயலவர், நண்பர் என்று ஒருவர் மீது ஒருவர் அன்பு கொள்கிறார்கள். உறவினர் மீதும் குடும்பத்தினர் மீதும் வைக்கின்ற அன்பே காலப்போக்கில் பறவைகள், விலங்குகள் என ஏனைய உயிரிகள் மீதும் அன்பு கொள்ளச் செய்கின்றது. இவ்வாறு அனைத்து உயிரினங்கள் மீதும் அன்பு கொள்வது மக்கட் பண்பாகும்.


வாசிப்போம்



சேரநாடு

தமிழகம் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்நாடுகளைத் தமிழ் மன்னர் ஆண்டு வந்தனர். அவர்கள் அறிவிலும் வீரத்திலும் சிறந்து விளங்கினர். அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் தமிழகம் சீரும்சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. அவர்களுள் சேரமன்னர் சேர நாட்டை ஆண்டு வந்தனர். சேரமன்னரின் கொடி விற்கொடியாகும். சேரமன்னர்களில் வானவரம்பன் நெடுஞ்சேரலாதன், இமயவரம்பன் சேரன்செங்குட்டுவன் ஆகிய இருவரும் புகழ்பெற்று விளங்கினர். சேரன்செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுத்துக் கண்ணகிக்குச் சிலை வைத்தான். இவனின் தம்பி இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை எழுதினார். அன்று சேரநாடு என்று அழைக்கப்பட்ட நாடே இன்று கேரளம் என்று அழைக்கப்படுகிறது.

வாசிப்போம்



முதலையும் குரங்கும்

ஓர் ஆற்றங்கரை அருகே நாவல் மரம் ஒன்று இருந்தது. அம்மரத்தில் நிறைய நாவற்பழங்கள் இருந்தன. குரங்கு அவற்றைப் பறித்து உண்ணும்போது சில பழங்கள் ஆற்றுக்குள் விழுந்தன. அந்த ஆற்றில் உள்ள முதலை அவற்றை உண்டது. "இப்பழங்கள் எவ்வளவு சுவையாக இருக்கின்றன; நாளும் இப்பழங்களை உண்ணும் குரங்கின் ஈரலும் சுவையாக இருக்குமே!" என எண்ணியது. குரங்கைக் கொன்று ஈரலை எடுத்துத் தின்னத் திட்டம் போட்டது. குரங்குடன் நட்புக்கொண்டது. குரங்கைத் தன்வீட்டுக்கு வரும்படி அழைத்தது. குரங்கைத் தன் முதுகில் ஏற்றிக்கொண்டு சென்றது. ஆழமான இடத்திற்கு வந்ததும் "குரங்கே! நான் உன்னைக் கொன்று உன் ஈரலைத் தின்னப் போகின்றேன்" என்றது. உடனே குரங்கு "இதை முன்பே கூறியிருந்தால் என் ஈரலைக் கொண்டு வந்திருப்பேன். என் ஈரலை மரத்தில் வைத்துவிட்டு வந்துவிட்டேன்" என்றது. "என்னைக் கொண்டுபோய்க் கரையில் விட்டால் ஈரலை எடுத்து வருகிறேன்" எனக் கூறியது. முதலை குரங்கைக் கரையில் கொண்டு வந்து விட்டது. குரங்கு தப்பினேன் பிழைத்தேன் என்று மரத்தில் தாவியது. தீயவருடன் நட்புக் கொள்ளக் கூடாது என்று தாய்க் குரங்கு கூறியது அப்போது அதற்கு நினைவுக்கு வந்தது.


வாசிப்போம்



காடு

இயற்கை எமக்களித்த சூழல் தொகுதி காடு. இச்சூழல் தொகுதி பல்லாயிரம் ஆண்டுகளாக ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாகும். இக் காடுகளில் பல்வேறு உயிரினங்கள் வாழ்கின்றன. இவை இயக்கச்சமனிலையைப் பேணுகின்றன. இக்காடுகளில் உள்ள மரங்களை வெட்டுவதன் மூலம் நாங்கள் இயக்கச்சமனிலையைச் சீரழிக்கின்றோம். இதனால் சில உயிரினங்கள் பெருகுகின்றன. சில உயிரினங்கள் குறைகின்றன. இயற்கைக் கட்டுப்பாடுகளை மீறிப் பெருகும் உயிரிகளால் பெரிய அளவில் தீமைகள் ஏற்படுகின்றன. காடுகளை அழிப்பதனால் மழை குறைவடையும். இதனால் பூமி வெப்பமாகும். எரிமலைகள் வெடிக்கத் தொடங்கும். பனிமலைகள் உருகும். கடல் மட்டம் அதிகரிக்கும். எனவே இயற்கைத் தாய் எமக்களித்த சூழல் தொகுதியான காட்டைப் பாதுகாப்பது எமது கடமையாகும்.

வாசிப்போம்



அறிவன்

ஒருநாள் அறிவன் தன் நண்பனுடன் விளையாடக் கடற்கரைக்குச் சென்றான். அப்பொழுது அங்கு சிறுவர் பலரும் தங்கள் பெற்றோருடன் கடற்கரைக்கு வந்திருந்தனர். அறிவன் நண்பனுடன் பந்தடித்து விளையாடிக் கொண்டிருந்தான். எதிர்பாராத வகையில் திரும்பிப் பார்த்தான். ஒரு சிறிய குழந்தை மெல்லமெல்ல நடந்து கடலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. பெற்றோர் கதைத்துக் கொண்டிருந்ததனால் அதனைக் கவனிக்கவில்லை. கடலில் இருந்து பெரிய அலை ஒன்று வந்தது. குழந்தை அலையில் அகப்பட்டுக் கீழே விழுந்து விட்டது. அடுத்த அலை வருவதற்கு முன்னர் அறிவன் கத்தியபடியே பாய்ந்து சென்று குழந்தையைக் காப்பாற்றினான். எல்லோரும் அறிவனின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தனர். குழந்தையின் பெற்றோர்கள் ஓடிவந்தனர். அறிவனிடம் இருந்து குழந்தையை வாங்கினர். அறிவனுக்கு நன்றி கூறினர்.

வாசிப்போம்



திருகோணேச்சுரம்

ஈழத்தின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள எழில்மிகு நகரம் திருகோணமலை. இந்நகரத்தில் ஐந்து ஈச்சுரங்களில் ஒன்றான திருகோணேச்சுரம் என்ற சிவன் கோவில் அமைந்திருக்கிறது. இது பாடல்பெற்ற கோவில்களில் ஒன்றாகும். இக்கோவில் நெடிதோங்கிய குன்றம் ஒன்றின் மேல் அமைந்திருக்கிறது. இதன் கீழே கடல்; மேலே பரந்திருக்கும் நீலவானம்; நறுமணஞ் சுமந்து வரும் தென்றற்காற்று இவையெல்லாம் இக்கோவிலுக்கு அழகு சேர்ப்பதுடன் மக்கள் மனதையும் மகிழ்விக்கின்றன. இலங்கை வேந்தனாகிய இராவணன் இக்கோவிலிலுள்ள ஈசனை வழிபட்டு வந்தான் என்பதும் அறிய முடிகிறது. இக்கோவிலைக் கட்டியவன் சோழநாட்டு மன்னன் வரராமதேவன் என்றும் அவனுடைய மகன் குளக்கோட்டு மன்னன் குளம் கட்டி வளம் சேர்த்தான் என்றும் தெரியவருகிறது.

வாசிப்போம்



செயற்கைக்கோள்

மாந்தனால் உருவாக்கப்பட்டு செயற்கையாக உலகைச் சுற்றி வரும் கோள் செயற்கைக் கோள் எனப்படும். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டில் இருந்தே அமெரிக்கா, உருசியா போன்ற நாடுகள் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தி வருகின்றன. இன்று பல்வேறு நாடுகளும் போட்டிபோட்டுக் கொண்டு அறிவியல் ஆய்வில் ஈடுபடுகின்றன. இதனாற் பல செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி வருகின்றன. எங்கள் தலைக்கு மேல் பல்லாயிரக்கணக்கான செயற்கைக் கோள்கள் சுற்றியபடியே இருக்கின்றன. இவை தகவற்றொடர்பு, உலகைப் பற்றிய ஆய்வு, முன்கூட்டியே இயற்கை நிகழ்வுகள் பற்றி அறிதல் போன்றனவற்றுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றன. தொலைபேசி உரையாடல்களும் இச்செயற்கைக் கோள் வழியாகத்தான் செல்கின்றன.

வளர் தமிழ் 6

வாசிப்போம்

வாசிப்போம்



விருந்தோம்பல்

தமிழருடைய பண்பாட்டிலே சிறந்தது விருந்தோம்பல். வீட்டுக்குவரும் விருந்தினரை முகம் மலர்ந்து வரவேற்று உணவளித்தல் விருந்தோம்பலாகும். இல்லறத்தார் செய்ய வேண்டிய கடமைகளுள் ஒன்றாக இதனைத் தமிழர் கருதுகின்றனர். இதன் சிறப்பை விளக்குவதற்கு வள்ளுவர் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தை எழுதியுள்ளார்.

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று

அதாவது எம்மிடம் வரும் விருந்தினருக்கு நாள் தோறும் உணவு கொடுத்துப் போற்றுபவனது இல்வாழ்க்கை என்றும் கெட்டுப் போவதில்லையென இக்குறள் கூறுகின்றது. சிலப்பதிகாரத்திலே கண்ணகி கோவலனைப் பிரிந்திருந்த காலத்தில் இல்லறத்தார் செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றான விருந்தோம்பற் பண்பைத் தான் செய்யவில்லையே என்று மனம் வருந்தியதாக இளங்கோவடிகள் கூறியுள்ளார். எமது புரட்சிக் கவிஞர் பாவேந்தர் கனகசுப்புரத்தினம் அவர்கள் குடும்பவிளக்கு என்ற தனது நூலில்

"இட்டுப்பார் உண்டவர்கள் இன்புற்றிருக்கையிலே
தொட்டுப்பார் உன் நெஞ்சைத் தோன்றும் இன்பம்" - என்று விருந்தோம்பலின்போது உண்டாகும் மகிழ்வைப்பற்றி விளக்குகின்றார். இதிலிருந்து நாம் விருந்தோம்பலின் சிறப்பை அறிந்து கொள்ளலாம்..

வாசிப்போம்



நல்லறிவைப்பெற.........

நாங்கள் பாடநூல்களைப் படிப்பதோடு வேறு நல்ல நூல்களையும் தேடிப் படிக்கவேண்டும். ஏனெனில் பள்ளி நூல்கள் துணைக் கருவிகளே. அந்நூல்களில் விதைந்துரைக்கப்பட்ட பகுதிகளைப் பள்ளிகளில் உள்ள நூலகங்களிலோ அல்லது பொது நூலகங்களிலோ தேடி விரிவாகப் படிக்கவேண்டும். வாசிப்பதனாலேதான் ஒரு மாந்தன் முழு மாந்தனாகின்றான். ஏனெனில் பல நூல்களைப் படிப்பதால் புதுப்புதுப் பட்டறிவுகளைப் பெறமுடியும். அது மட்டுமன்றி நூல்கள் சிறந்த நண்பனாகும். நல்ல நண்பனைப் போல் நல்ல நூலும் எமக்கு நல்வழி புகட்டும். அகராதியைப் பயன்படுத்திப் பொருள் தெரியாத சொற்களின் கருத்தை அறிந்துகொள்ளல் அகத்தியம். செய்தித்தாள்கள், நல்லறிவைப் புகட்டும் கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள் எனப் பலவற்றையும் வாசித்து அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். சிறு வயதில் இருந்தே இப்பயிற்சியை மேற்கொண்டால் நல்லறிவைப் பெறமுடியும்.


வாசிப்போம்



அறுசுவை

மாந்தன் நாள் தோறும் பலவகையான உணவுகளை உண்கின்றான். பருகைகளைப் பருகுகின்றான். இவ்வுணவுகள் ஒவ்வொன்றும் பல்வேறு சுவைகளுடையன. தமிழர் சுவைகளை ஆறாகப் பிரித்தனர். அவற்றிற்கு அறுசுவை எனப் பெயரிட்டனர். அவை கைப்பு, தித்திப்பு (இனிப்பு), உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு (உறைப்பு) என்பனவாகும். பாகற்காய் கைக்கும். கரும்பு இனிக்கும். உப்பு உவர்க்கும். மாங்காய் புளிக்கும். பாக்குத் துவர்க்கும். மிளகாய் உறைக்கும். சில உணவுகள் கலப்புச் சுவை கொண்டவை. இதற்கு எடுத்துக் காட்டுத் தக்காளிப்பழம். இதில் இனிப்பு, புளிப்பு ஆகிய இரு சுவைகளும் கலந்துள்ளன. தமிழர் விழா நாட்களின்போது அறுசுவை உணவுகளைச் சமைத்து உண்பர். தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இன்று பல வகையான உணவுகள் விற்கப்பட்டாலும் நாம் வீட்டில் உடனுக்குடன் சமைத்து உண்ணும் அறுசுவை உணவுகளே உடல் நலத்திற்குச் சிறந்தவையாகும்.

வாசிப்போம்



கணினி

இன்று எமது வாழ்க்கையில் கணினி முதன்மையான இடத்தைப் பிடித்துள்ளது. எல்லாப் பணிமனைகளிலும் கணினியின் பங்களிப்புக் கூடுதலாக இருக்கின்றது. கணினியின் மூலம் நாம் பல்வேறு பயன்களைப் பெறமுடியும். அஞ்சல்கள் பொறித்துப் படிகள் எடுத்துக் கொள்ளலாம். தூர இடங்களில் வாழ்பவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் எமது ஒளிப்படங்களையும் தகவல்களையும் அனுப்பலாம். இறுவட்டு மூலம் படங்களையும் பாடல்களையும் கேட்டும் பார்த்தும் மகிழலாம். இணையத்தின் ஊடாகப் பல தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். எமக்குத் தேவையான பகுதிகளை அந்நூல்களில் இருந்து படி எடுத்துப் படிக்கலாம். அத்துடன் எமக்கு விருப்பமான விளையாட்டுக்களைக் கணினியில் விளையாடலாம். இனிவரும் காலங்களில் இக் கணினியின் தேவையும் வளர்ச்சியும் இன்னும் அதிகரிக்கும் என்பதில் ஐயம் இல்லை.




வாசிப்போம்

தேயிலை

முன்னொரு காலத்தில் சென்-சுங் என்றொரு சீன மன்னர் இருந்தார். அவர் கொதிக்க வைத்து ஆறிய நீரையே அருந்தும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். ஒரு நாள் அரசரின் பணியாட்கள் மரங்கள் அடர்ந்த ஒரு பகுதியில் அரசருக்காகப் பானை ஒன்றில் நீரைக் கொதிக்க வைத்தனர். ஆறிய பின்னர் அரசர் அந்நீரைப் பருகினார். என்ன விந்தை! அந்நீர் என்றுமில்லாதவாறு சுவையும் மணமும் கொண்டிருந்தது. அரசர் அந்நீரைக் கவனித்துப் பார்த்தார். அது ஒரு நிறத்தைப் பெற்றிருந்தது. நீரைக் கொதிக்க வைக்கும் போது அருகிலிருந்த செடியொன்றிலிருந்து இலைகள் பானையுள் விழுந்தமையே அதற்குக் காரணம் என்று அரசர் அறிந்தார். பின்னாளில் அதுதான் தேயிலை என்று கண்டறியப்பட்டது. இன்று தேநீர் உலகில் பலராலும் விரும்பி அருந்தப்படுகிறது. இத்தேயிலைப் பயிர்ச்செய்கை இலங்கையில் ஆங்கிலேயரால் அறிமுகஞ் செய்யப்பட்டது.

வாசிப்போம்



பழமொழியும் விடுகதையும்

நாட்டார் இலக்கியத்தின் ஒரு பகுதியாகத் திகழ்வனவே பழமொழியும் விடுகதைகளுமாகும். நம் முன்னோர் தங்கள் பட்டறிவுகளைப் பழமொழிகளாகத் திரட்டித் தந்திருக்கின்றனர். ''ஆழமறியாமல் காலைவிடாதே'' ''அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு'' போன்ற பல பொன்மொழிகளைப் பழமொழிகளாகத் தந்துள்ளனர். இப்பழமொழிகள் சிறந்த அறிவுரைகளாக விளங்குவதுடன் வாழ்க்கைக்கு ஏற்ற நல்வழிகாட்டிகளாகவும் அமைந்திருக்கின்றன. விடுகதைகள் எங்கள் சிந்தனையைத் தூண்டுகின்றன. சிறுவர் முதல் பெரியோர் வரை விடுகதைகளை விரும்பிக் கேட்பர். "ஆடை உடுத்திருக்கும் பெண்ணும் அல்ல அழகான முத்துண்டு சிப்பி அல்ல; தாடி உண்டு மீசை உண்டு கிழவன் அல்ல; தக்கதோர் உணவாகும்.'' அது என்ன? அது சோளப் பொத்தி. இவ்வாறன விடுகதைகள் அறிவை வளர்ப்பதுடன் ஆவலையும் தூண்டுகின்றன.

வாசிப்போம்



சுற்றுலா

நாடுகளில் உள்ள அனைத்துப் பள்ளிகளும் மாணவர்களை ஏதோ ஒரு பருவகாலத்தில் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்கின்றன. சுற்றுலா இரண்டு வகைப்படும். அதாவது பெற்றோருடன் பிள்ளைகள் விருப்பமான இடத்திற்குச் சென்று தங்களுக்கு விருப்பமான இடத்தைத் தெரிவு செய்வர். அங்குள்ள சிறப்பான இடங்களையோ நிகழ்வுகளையோ கண்டு களிப்பர். பள்ளிகளினால் அழைத்துச் செல்லப்படும் சுற்றுலா கல்விச்சுற்றுலா எனப்படும். இச்சுற்றுலாவிற்கான இடங்கள் பள்ளிப் பொறுப்பாளரினால் தீர்மானிக்கப்படும். இச்சுற்றுலாவிற்குப் பெற்றோரின் உடன்பாட்டுடன் மாணவர்களை அழைத்துச் செல்வர். ஏனெனில் மாணவர்கள் தங்கள் பள்ளி நூல்களில் படித்தவற்றை நேரடியாகக் கண்டு உணரும் திறனை இக் கல்விச் சுற்றுலா வளர்க்கின்றது. இச்சுற்றுலா மிகவும் பயனுள்ளதொன்றாக அமைகின்றது.

வாசிப்போம்



அயலவர்

நாம் எப்பொழுதும் ஒருவருடன் ஒருவர் அன்புடனும் மதிப்புடனும் பழகக் கற்றுக்கொள்ள வேண்டும். எமது உறவுகளுடன் மட்டுமே அன்புடன் பழகாது எமது அயலவரோடும் அன்புடனும் மதிப்புடனும் பழகுதல் வேண்டும். அயலவர் என்றும் எம் அருகில் இருப்பவர். அவர்கள் இனத்தால், மொழியால் வேறுபட்டாலும் அவர்கள் என்றும் எம் அயலவரே. எங்களுக்கு ஏதும் இடர் என்றால் எங்கள் உறவுகள் வருவதற்குள் உடனே வரக்கூடியவர்கள் எமது அயலவரே. ''தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்குதவாது'' என்று எம் முன்னோர் அழகாகப் பழமொழி மூலம் சொல்லி வைத்துள்ளனர். இப்போது எமது உறவுகள் இங்கொன்றும் அங்கொன்றுமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் அயலவரே எங்களுக்கு என்றும் துணை. எனவே அயலவரோடு அன்புடன் பழகுவோம். அவர்களது இன்பதுன்பங்களில் பங்கு கொள்வோம்.

வாசிப்போம்



இரண்டகம்

ஓர் ஊரில் அறமதி, கெடுமதி என்ற இரண்டு நண்பர்கள் வாழ்ந்து வந்தனர். கெடுமதி எப்பொழுதும் தீய எண்ணம் உள்ளவன். கெடுமதி தீய எண்ணத்துடன் பழகுவது அறமதிக்குத் தெரியாது. ஒரு நாள் இருவரும் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது புதையல் ஒன்று கிடைத்தது. "இந்தப் புதையலை அரசனிடம் கொண்டு செல்வோம். அரசன் என்ன கூறுகின்றாரோ அதன்படி செய்வோம்" என்று அறமதி கூறினான். அதற்குக் கெடுமதி "இன்று மாலையாகி விட்டது ஓர் இடத்தில் இதைப் புதைத்து விட்டு மறுநாட் காலை வந்து எடுப்போம்" என்றான். அறமதியும் அதற்கு ஒப்புக் கொண்டான். மறுநாட்காலை அறமதி அந்த இடத்திற்கு வந்து பார்த்தான். புதையலைக் காணவில்லை. கெடுமதியும் சொன்னபடி வரவில்லை. அறமதி நடந்தவற்றை அவ்வூர்ப் பெரியவரிடம் கூறினான். எல்லோரும் வந்து அந்த இடத்தைப் பார்த்தனர். அப்போது "அறமதிதான் அப்புதையலை எடுத்தவன்" என்று ஒரு விசும்பொலி கேட்டது. இது கெடுமதியின் வேலை என்பது அறமதிக்குப் புரிந்து விட்டது. ஒலி வந்த திசையை நோக்கினான். ஒரு பெரிய பொந்துள்ள மரம் இருந்தது. அந்த மரத்தைக் கொழுத்தினான். அதற்குள் இருந்து கத்தியபடியே எரிகாயங்களுடன் கெடுமதி வெளியே வந்தான்.

வாசிப்போம்



நன்றி

மாந்தராகப் பிறந்த நாம் பிறர் எமக்குச் செய்யும் உதவியை என்றுமே மறந்து விடக்கூடாது. நாங்கள் என்றுமே தனித்து வாழமுடியாது. எமது தேவைகளை நிறைவேற்ற நாம் பலரது உதவிகளையும் நாட வேண்டியிருக்கும். இவ்வாறு பிறர் எமக்குச் செய்யும் உதவிகளை நாம் என்றும் நினைத்திருக்க வேண்டும். ஆனால் யாராவது எமக்குத் தீங்கு செய்திருந்தால் அதனை நாம் உடனே மறந்து விடவேண்டும். இவ்வாறு வாழ்வதே நல்ல பண்பாகும். இதனையே பொய்யாமொழிப் புலவரான திருவள்ளுவரும்

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல

தன்றே மறப்பது நன்று - எனக் கூறியுள்ளார்.

எனவே நாம் தீயனவற்றை மறந்து நல்லனவற்றையே செய்வோம். ஒருவருக்கொருவர் உதவி செய்து ஒற்றுமையாக வாழ்வோம்.

வாசிப்போம்



சினங்காப்போம்

உங்கள் நண்பர்கள் உறவினரிடையே சில வேளைகளில் மனக்கசப்பு ஏற்படலாம். அதனால் சினம் ஏற்படுவதும் இயற்கை. ஆனால் அப்படி ஏற்படும் சினத்தை நாம் பொறுத்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் எமது உறவினர் எம்மை விட்டுப் பிரிந்துவிடுவர். பொறுத்துக்கொள்வது மாந்த இயல்பு என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். அப்படியின்றி உண்டாகும் சினத்தைப் பெரிதாக்கிச் செயற்படுத்தக் கூடாது. இல்லையேல் அச்சினம் தன்னையும் அழித்துத் தன்னைச் சூழ உள்ளவர்களையும் அழித்துவிடும். அறியாமையினால் ஏற்படும் தவறுகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். தவறு செய்தவர் அதை ஒப்புக்கொண்ட பின்னும் சினத்தை அடக்காமல் பகைமை பாராட்டக்கூடாது. தீராத சினத்தினால் வன்மம் வளரும். அதனாலன்றோ ஔவையார் ஆத்திசூடியில் “ஆறுவது சினம்” என்றும் கொன்றைவேந்தனில் “தீராக் கோபம் போரா முடியும்” என்றும் கூறியிருக்கின்றார்.

வாசிப்போம்



உண்மை உறவு

ஓர் ஊரின் நடுவே ஒரு குளம் இருந்தது. அந்தக் குளத்தைச் சுற்றி மரங்கள் வளர்ந்து நின்றன. குளத்தில் தவளை, மீன் முதலிய விலங்குகளும் கொக்கு, நாரை, மீன்கொத்தி, நீர்க்காகம் போன்ற நீர்ப்பறவைகளும் வாழ்ந்து வந்தன. இப்பறவைகள் குளத்தில் உள்ள மீன்களைக் கொத்தித் தின்னும். கோடை காலம் வந்தது. குளத்தில் நீர் வற்றியது. பறவைகள் வேறு குளத்தை நாடிச் சென்றுவிட்டன. ஆனால் குளத்திலிருந்த கொட்டி, நெய்தல், ஆம்பல்போன்ற நீர்ச்செடிகள் வறண்ட அக்குளத்தின் அடியிலே காய்ந்து ஒட்டிக் கொண்டிருந்தன. மாந்தன் வளமாக வாழும் போது எல்லோரும் உறவாடுவர். அந்த மாந்தரது வாழ்க்கையில் வறுமை வந்து விட்டால் குளத்தை விட்டுப் பறவைகள் சென்றது போலப் பலர் அவனை விட்டு நீங்குவர். ஆனால் சிலர் எவ்வளவு துன்பம் வந்தாலும் அவனை விட்டு விலகமாட்டார். அவர்களே உண்மை உறவுகள். அதற்குக் கொட்டி, நெய்தல், ஆம்பல், போன்ற நீர்ச்செடிகள் எடுத்துக்காட்டுகளாகும். இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்திருக்கும் உறவே என்றும் உண்மை உறவாகும்.

வாசிப்போம்



நகரமும் கிராமமும்

எங்களிற் பலர் நகரங்களில் வாழ்வதையே விரும்புகின்றோம். கிராமங்களில் வாழ்வதை வெறுக்கின்றோம். உண்மையில் நகர வாழ்க்கையைவிடக் கிராமவாழ்க்கை மிகவும் நலன் நிறைந்த வாழ்க்கையாகும். கிராமத்தில் மரம், செடி, கொடிகள் நிறைந்துள்ளன. தூய்மையான வளியும் கிடைக்கின்றது. கிராமத்தில் வாழ்வோருக்குப் புத்தம்புதிய காய்கறிகள் உடனுக்குடன் கிடைக்கின்றன. கிராமத்தில் மரங்களிலிருந்தே பழங்களைப் பறித்து உடனடியாக உண்ண முடியும். நகரங்களில் வாழும் மக்களுக்கு உடனடிக் காய்கறிகள், கீரைவகைகள், பழவகைகள் என்பன கிடைப்பது குறைவு. அது மட்டுமன்றி நகரத்தில்; உந்துகளில் இருந்து வெளியேறும் புகை, தொழிலாலைகளில் இருந்து வெளியேறும் புகை, கழிவுகள் என்பன வளியையும் சூழலையும் மாசடையச் செய்கின்றன. இதனால் நகரத்தில் உள்ளவர்களுக்குப் பல நோய்கள் ஏற்படுகின்றன. ஆனால் கிராமத்தில் உள்ளவர்களுக்கு நோய்கள் ஏற்படுவது குறைவு.

வாசிப்போம்



கலையுள்ளம்

பனி படர்ந்த குற்றால மலையின் அருவி கண் கொள்ளாக் காட்சியாகவுள்ளது. பாய்ந்து வரும் அருவியின் நீரோசையோ செவிகளில் இனிய இசையாக ஒலிக்கின்றது. அருவியிலிருந்து வீழ்கின்ற நீர் மிகவும் தூய்மையானது. இதில் நீராடினால் உடல் மட்டுமல்ல உள்ளமும் குளிர்கின்றது. இவை அனைத்தும் இயற்கையின் கொடைகளே. இவற்றைக் கண்டு மகிழ்ந்த மாந்தன் தனது உள்ளத்தில் தோன்றிய அழகுணர்ச்சியைக் கற்பனை உணர்வுடன் படைக்கின்றான். அதுவே கலை எனப்படுகிறது. இயற்கையின் படைப்புகளுடன் மாந்தனின் உணர்வுகள் ஒன்றும் போது அங்கு கலை பிறக்கின்றது. கற்பனைத் திறங்கொண்ட கலைஞன் தான் கண்டுகளித்த இன்பத்தைப் பிறரும் கண்டுகளிக்கும் வகையில் இன்கலைகளினூடாக வெளிப்படுத்துகிறான். இசை, நடனம், ஓவியம், சிற்பம், நாடகம் என்பன இன்கலைகளாகும். அழகுணர்ச்சியுடைய இக்கலைகளால் மாந்தன் மகிழ்வடைகின்றான். அவனது வாழ்வும் இன்பமாக அமைகின்றது.

வாசிப்போம்



காகம்

காகம் ஒரு பறவை. இது மரங்களில் கூடு கட்டி வாழும். காகம் அதிகாலையில் எழும். இது 'கா கா' என்று கரையும். காகம் ஒற்றுமையான பறவை. இது உணவைக் கண்டால் தன் உறவுகளை அழைத்துக் கூடி உண்ணும். எங்கு சென்றாலும் தன் கூட்டுக்குத் திரும்பும். ஒவ்வொரு நாளும் மாலையில் குளித்துவிட்டே தன் கூட்டுக்குத் திரும்பும். இலக்கியங்களில் காகத்தைப் பற்றிச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. மாந்தன் காகத்திடமிருந்து கற்க வேண்டிய பண்புகள் நிறைய உண்டு. வைகறையில் துயில் எழுதல், உறவாடி மகிழ்தல், உறவுகளோடு கூடி உண்ணல், மாலையில் நீராடல், எங்கும் தங்காது கூட்டுக்கே திரும்புதல் என்பன காகத்தின் சிறந்த பண்புகள்.

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமும்
மன்னநீ ராரக்கே யுள - என்ற

குறள் மூலம் காகத்தைப் போல பகுத்து உண்டு வாழ்வோரே வாழ்வில் உயர்வடைவர் என்று காகத்தின் சிறப்பை வள்ளுவரும் விளக்குகின்றார்.

வாசிப்போம்



இன்சொல்

நாம் எப்பொழுதும் இனிய சொற்களையே பேச வேண்டும். இனிய சொற்கள் என்றும் இன்பம் பயப்பன. கடுஞ்சொற்கள் எப்பொழுதும் துன்பத்தையே தரும். பேசிய சொல்லையும் வீசிய அம்பினையும் எம்மால் எப்பொழுதும் திரும்பிப்பெற முடியாது. இதனாற்றான் வள்ளுவர் "நாகாக்க" என்று கூறினார். அது மட்டுமல்லாமல் எங்கள் வாயில் இருந்து வரும் சொற்கள் எம் குலத்தையே ஐயப்பட வைத்துவிடும். இதனையும் வள்ளுவர் "குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்" எனச் சிறப்பாக விளக்குகின்றார். அத்துடன் மட்டும் நின்றுவிடாமல் இனிய சொற்கள் இருக்கத் தீய சொற்களைப் பேசுவது இனிய கனிகள் இருக்க அதை உண்ணாமல் காய்களைப் பறித்து உண்ணுவது போன்றது எனக் கூறுகின்றார். "கனி இருப்பக் காய் கவர்ந்தற்று" என்ற ஆழமான வரிகள் மூலம் இதனை வள்ளுவர் விளக்குகின்றார். இனிய சொற்களையே என்றும் பேசுவோம்.

வாசிப்போம்



பூவகை

பூக்களை நிலப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ என வகுப்பர். தாமரை ஒரு நீர்ப்பூவாகும். இது குளங்கள் மற்றும் ஓடைகளில் உள்ள சேற்றில் வளரும். தாமரை நீரின் மேல் தனது இலைகளைப் பரப்பி நிற்கும். தாமரை மொட்டுகள் கூம்பு வடிவானவை. இதன் பூக்கள் வெள்ளை, இளஞ்சிவப்பு நிறங்கொண்டவை. தமிழ் இலக்கியங்களில் தாமரை பற்றிய செய்திகள் உள்ளன. தாமரை போன்றே அல்லியும் ஒரு நீர்ப்பூவாகும். இது இலைகளின் நடுவே பூக்கும். பூவின் நடுப்பகுதி மஞ்சள் நிறமாக இருக்கும். இலைகள் வட்டவடிவமானவை. கொன்றை கோட்டுப்பூ வகையைச் சேர்ந்தது. இது மரத்தில் கொத்துக்கொத்தாகப் பூக்கும். இதன் நிறம் மஞ்சள். முல்லை கொடிப்பூ வகையைச் சேர்ந்தது. முல்லை மலர்கள் வெண்மை நிறங் கொண்டவை. நறுமணம் பரப்புவன. இவையும் கொத்துக்கொத்தாகவே மலரும். முல்லை இரவில் பூக்கும்.

வாசிப்போம்



கடல்

இயற்கை எமக்களித்த அருங்கொடைகளில் கடலும் ஒன்றாகும். கடல் எமது உணவுத் தேவையைப் பெருமளவு நிறைவு செய்கின்றது. கடல் உணவுகளான மீன், நண்டு, இறால், கணவாய் போன்றவற்றை நாம் கடற்றொழில் மூலம் கடலிலிருந்தே பெறுகின்றோம். இக்கடலுணவுகள் எங்கள் உடலுக்குத் தேவையான அயடினைத் தருகின்றன. அது மட்டுமன்றி எமக்குத் தேவையான கறியுப்பும் கடலிலிருந்தே பெறப்படுகின்றது. விலைமதிப்பற்ற முத்தும் கடலிலிருந்தே கிடைக்கின்றது. பண்டைக்காலத்தில் பொருட்கள் கடல் வழியாகவே கொண்டு செல்லப்பட்டன. அத்துடன் ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கான போக்குவரத்தும் கப்பல் மூலம் கடல் வழியாகவே இடம் பெற்றது. இவ்வாறு கடலானது மக்கள் வாழ்க்கையில் இன்றியமையாத ஓர் இடத்தைப் பிடித்திருக்கிறது. குழந்தைகள் முதல் பெரியோர் வரை கடலில் குளித்துக் கடற்கரையில் விளையாடி மகிழ்வர். இத்தகைய சிறப்பு வாய்ந்த கடலானது ஆழிப்பேரலையாகப் பொங்கி எழுந்து அழிவுகளை ஏற்படுத்துவது மிகவும் துயரமான ஒரு நிகழ்வாகும். அம்மாவைப் போல் அனைவரையும் அணைத்த கடல் அழிவுகளை ஏற்படுத்துவதன் காரணம் மாந்தனே. சூழல் மாசடைவதால் இயக்கச்சமநிலையில் ஏற்படும் மாற்றமே இதற்குக் காரணம். சூழலைப் பாதுகாப்போம் நலமாக வாழ்வோம்.

வாசிப்போம்



ஆபிரகாம்லிங்கன்

சிறுவன் ஒருவன் கடை ஒன்றில் வேலை பார்த்து வந்தான். ஒரு நாள் மூதாட்டி ஒருவர் இரவுநேர நிகழ்ச்சி ஒன்றில் கலந்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார். சிறுவனின் கடையில் விளக்கு எரிந்து கொண்டிருந்ததைக் கண்டார். அக்கடைக்குச் சென்று கதவைத் தட்டினார். தூக்கக் கலக்கத்தில் இருந்த சிறுவனிடம் ஒரு இறாத்தல் தேயிலை தரும்படி கேட்டார். சிறுவன் தேயிலையை நிறுத்துக் கொடுத்துவிட்டு அதற்கான பணத்தைப் பெற்று மேசையில் வைத்துவிட்டு மீண்டும் தூங்கி விட்டான். விடிந்ததும் எழுந்து பார்த்தான் நிறுக்கும் தட்டில் அரை இறாத்தலுக்கான படியும் மேசையில் ஒரு இறாத்தலுக்கான பணமும் இருப்பதைக் கண்டான். அரை இறாத்தல் தேயிலையைக் குறைத்துக் கொடுத்துவிட்டேனே! என்று மனம் வருந்தினான். உடனே அரை இறாத்தல் தேயிலையை எடுத்துக் கொண்டு மூதாட்டியின் வீட்டைத் தேடி அவரிடம் கொடுத்துத் தன் பிழையைப் பொறுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டான். “விளையும் பயிரை முளையிலே தெரியும்” என்ற பழமொழிக்கு இணங்க அச்சிறுவன் பின்னாளில் அமெரிக்க நாட்டு முதல்வனானான். அவர்தான் ஆபிரகாம்லிங்கன்.

வாசிப்போம்



செய்தித்தாள்

செய்திகளை வெளியிடுவதில் செய்தித்தாள்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. ''பாரிடைத் துயில்வோர் கண்ணிற் பாய்ந்திடும் எழுச்சி நீதான்'' என்று கவிஞர் கனகசுப்புரத்தினம் செய்தித்தாள் பற்றிக் கூறுகின்றார். மக்களிடையே எழுச்சியையும் அறிவொளியையும் ஏற்படுத்துவது செய்தித்தாள். இத்தகைய செய்தித்தாளின் தலைப்பு எப்பொழுதும் மக்களை ஈர்க்கும் வகையில் அமைதல் வேண்டும். செய்தித்தாளில் இடம் பெறும் செய்திகள் உண்மைத் தன்மை வாய்ந்தனவாக இருத்தல் வேண்டும். வாசிக்கும் உள்ளங்களில் ஆர்வத்தைத் தூண்டுவனவாக அமைதல் வேண்டும். செய்தித்தாளில் உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகள், அரசியற் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், விளம்பரங்கள், அறிவியற் கட்டுரைகள், கதைகள் போன்ற விடயங்கள் இடம் பெறுகின்றன. அதனாற்றான் மக்கள் விடிந்ததும் செய்தித்தாள் படிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வளர் தமிழ் 7

வாசிப்போம்

வாசிப்போம்



வீரேசுவரன்

இந்தியாவில் உள்ள கொல்கத்தா (கல்கத்தா) நகரில் புவனேசுவரி விசுவநாததத்தர் என்ற இணையருக்கு 12-01-1863 அன்று அழகிய ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்கு வீரேசுவரன் என்று பெயரிட்டனர். செல்லமாகப் பிலே என்று அழைத்தனர். பிலே மிகவும் அன்புள்ள சிறுவனாகவும் பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவனாகவும் வளர்ந்து வந்தான். ஒரு நாள் பள்ளியில் ஆசிரியர் கேட்ட கேள்விக்கு பிலே பதில் சொன்னான். ஆசிரியர் அந்த விடை தவறு எனக் கூறினார். பிலே தனது விடை சரி என்று ஆசிரியரிடம் திருப்பிக் கூறினான். சினமடைந்த ஆசிரியர் பிலேயை அடித்தார். பிலே நடந்தவற்றைத் தன் தாயிடம் கூறி அழுதான். தாய் மகனுக்கு ஆறுதல் கூறினார். அன்று மாலை ஆசிரியர் பிலேயின் வீட்டுக்கு வந்து “குழந்தையே! நீ சொன்ன விடை சரியானது. நான்தான் பிழையாக நினைத்து உன்னை அடித்து விட்டேன்” என்று மனம் வருந்தினார். துணிச்சலும் அன்பும் கொண்ட பிலே நரேந்திரன் என்றும் அழைக்கப்பட்டார். பின்னாளில் இவர்தான் சுவாமி விவேகானந்தர் ஆனார்.


வாசிப்போம்



சிரிப்பு

சிந்திக்கத் தெரிந்த மாந்தனுக்கு மட்டுமே உரியது சிரிப்பாகும். சிரிக்கத் தெரிந்தவன் வாழப் பிறந்தவன் என்று கூறுவர். சிரிப்பைப் புன் சிரிப்பு, குமிண்சிரிப்பு, முறுவல், நகைப்பு என்றெல்லாம் வேறுபடுத்துவர். ''வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'' என்பர் எம் முன்னோர். இன்றைய பொறிமுறை உலகிலே நாங்கள் சிரிப்பதை மறந்து வருகின்றோம். பூ மலர்வது போல் மலர்வது சிரிப்பு. இத்தகைய சிரிப்பு ஓர் அழகின் வெளிப்பாடு. அழகியல் உணர்வு உள்ளவராலேயேதான் சிரிக்கமுடியும். நகைச்சுவை மாந்தனைச் சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கின்றது. அதனாற்றான் அதை ஒரு கலை என்கின்றோம். பிறர் சிரிக்கத்தான் நாம் வாழக்கூடாது. ஆனால் நாம் சிரித்து வாழலாம். இந்த உலகில் எந்த மொழி பேசும் மாந்தனாக இருந்தாலும் சிரிப்பு ஒரு பொது மொழியாக அமைந்துள்ளது. இது மிகவும் சிறப்புக்குரிய ஒன்றாகும்.


வாசிப்போம்



உவமைச் சிறப்பு

ஔவையார் சிறந்த பெண்புலவர். அவர் சிறுவர் முதல் பெரியோர் வரைக்குமான நற்கருத்துக்களைக் கூறும் பாடல்கள் பலவற்றை எழுதியுள்ளார். அவை எந்தக் காலத்திலும் எப்பொழுதும் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளன. அந்த வகையில் ஔவையார் எழுதிய மூதுரையில் இடம் பெற்ற பாடல் ஒன்றில் உதவி பற்றிய ஒரு சிறந்த விளக்கத்தைக் கூறியுள்ளார். நல்லவருக்குச் செய்த உதவியானது கல்லிலே எழுதிய எழுத்துப் போல் என்றும் அழியாது நிலைத்து நிற்கும். அவர்கள் என்றும் செய்நன்றி மறவாதவர்களாக இருப்பர். ஆனால் தீயவருக்குச் செய்த உதவியை அத்தீயவர் அப்பொழுதே மறந்து விடுவர். அவர்கள் செய்நன்றி மறந்தவர்களாவர். இதனை ஔவையார் நீர்மேல் எழுத்துக்கு உவமையாகச் சொல்கின்றார். நீர்மேல் எழுத்து ஒரு நொடிப்பொழுதும் நிலைத்து நிற்காது. இவ்வாறு சிறந்த உவமைகள் மூலம் சொல்ல வந்த விடயத்தை விளக்குவது ஔவையாரின் சிறப்பாகும்.

வாசிப்போம்



மாலைக் காட்சி

கதிரவன் தன் பொற்கதிர்களால் மஞ்சள் நிற வெய்யிலைப் பரப்பியபடி மேற்கு வானில் மெல்லமெல்ல மறையத் தொடங்குகிறான். மாலை வேளையாகிறது. வானம் செக்கச்செவேல் எனச் சிவக்கிறது. மல்லிகையும் முல்லையும் மொட்டவிழ்ந்து மணம் வீசிச் சிரிக்கின்றன. பொய்கையிலே அல்லி மலர்கின்றது. தாமரை குவிகின்றது. புள்ளினங்கள் ஒலியெழுப்பியவாறு தங்கள் கூட்டை அடைகின்றன. மேய்ச்சலுக்குச் சென்ற ஆவினங்கள் கன்றுகளைத் தேடிக் கதறிக் கொண்டு வீடுகளை நோக்கிச் செல்கின்றன. தாயின் குரலைக் கேட்ட கன்றுகள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கின்றன. வேலைக்குச் சென்றவர்கள் வீடு திரும்புகின்றனர். அவர்களின் கைகளில் வீட்டிற்குத் தேவையான பொருட்கள் இருக்கின்றன. வீட்டில் உள்ள பெண்கள் விளக்கேற்றத் தொடங்குகின்றனர். மாலை முழுவதும் விளையாடிக் களைத்த சிறுவர் வீடு திரும்புகின்றனர். இப்போது கதிரவன் முழுமையாக மறையத் தொடங்குகிறான். மாலை நேரம் மனதிற்கு மகிழ்ச்சியான நேரமாகும்.

வாசிப்போம்



விபுலாநந்த அடிகள்

விபுலாநந்தர் தமிழ்மொழி மீது பற்றுக் கொண்டவர். இவரது இயற்பெயர் மயில்வாகனன். இவர் மட்டக்களப்பில் உள்ள காரைதீவு என்னும் ஊரில் 1892ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இராமகிருட்டின மடத்தில் சேர்ந்து துறவியான போது விபுலாநந்த அடிகள் என்ற பெயரைப் பெற்றார். தமிழ்மக்கள் தம்முடைய வரலாறு, மொழி, இலக்கியம், பண்பாடு முதலானவற்றின் பெருமைகளை உணர்ந்து பேணவேண்டும் என்பதிலும் அவற்றை வளர்க்க வேண்டும் என்பதிலும் அவர் பேரார்வம் உடையவராக இருந்தார். அதனால் அவர் தமிழுக்காக அரும்பாடுபட்டார். இவர் இயல், இசை, நாடகம் என்பவற்றில் திறமை பெற்றவராக விளங்கினார். இதனால் 'முத்தமிழ் வித்தகர்' எனப் போற்றப்பட்டார். இவர் எழுதிய 'யாழ்நூல்' மிகவும் சிறப்பு வாய்ந்தது. எல்லோராலும் புகழ்ந்து போற்றப்படுகின்றது. விபுலாநந்த அடிகள் ஏழை மாணவரின் கல்விக்குப் பெரிதும் உதவி செய்தார். இவர் 19.07.1947இல் இயற்கை எய்தினார். இவர் இயற்கை எய்திய நாளே அகில இலங்கைத் தமிழ் மொழி நாளாக இலங்கையில் கொண்டாடப்படுகிறது.

வாசிப்போம்



பெரியவர்

ஓர் ஊரில் பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் ஊர்மக்களுக்கு நன்மை செய்வதையே தன் பணியாகக் கொண்டிருந்தார். அவர் குடும்ப உறவுகள் ஏதும் இன்றித் தனியாகவே வாழ்ந்து வந்தார். ஆனால் அவருக்குப் பணி செய்ய அவருடன் சிலர் எந்நேரமும் இருப்பர். அவர்களுடனும் அப்பெரியவர் மிகவும் அன்புடன் பழகுவார். யார் என்ன கொண்டு வந்து கொடுத்தாலும் அவர்களுடன் சேர்ந்தே உண்பார். ஒரு நாள் அந்த ஊரில் உள்ள ஓர் ஏழைப் பெண்மணி "ஐயா இப்பழங்கள் என் மரத்தில் முதன்முதலில் பழுத்தவை. முதலில் உங்களுக்கே தர வேண்டும் என்ற விருப்பத்தில் கொண்டு வந்தேன். நீங்கள் இவற்றை உண்ண வேண்டும்" என்று மிகவும் அன்புடன் இரு மாங்கனிகளைக் கொடுத்தார். அப் பெரியவர் அக்கனிகளை வெட்டி உண்ணத் தொடங்கினார். இரண்டு கனிகளையும் தானே உண்டு விட்டார். பெண்மணி மகிழ்ச்சியுடன் சென்றுவிட்டார். பணியாளர்கள் அப்பெரியவரிடம் "எமக்குக் கொடுக்காமல் நீங்கள் எதுவும் உண்ணமாட்டீர்களே! இன்று மட்டும் ஏன் இப்படிச் செய்தீர்கள்" எனக் கேட்டனர். அதற்கு அப்பெரியவர் "அப்பெண்மணி கொண்டுவந்த கனிகள் மிகவும் புளிப்பானவை உங்களுக்கு நான் அக்கனிகளைத் தந்திருந்தால் அவற்றை நீங்கள் உண்டு முகத்தில் வெறுப்பைக் காட்டியிருப்பீர்கள் அதனால் அப்பெண்மணியின் மனம் நொந்திருக்கும் எனவேதான் இரண்டு கனிகளையும் நானே உண்டேன். எப்பொழுதும் நாம் யார் மனதையும் நோகடிக்கக் கூடாது" என்றார்.

வாசிப்போம்



நீங்கள் என்ன மரம்?

மக்களின் குணத்திற்கும் பழக்கத்திற்கும் எடுத்துக்காட்டாக மூன்று மரங்களை அறிஞர் கூறுவர். அவை வாழை, தென்னை, பனை என்பனவாகும். சிலர் உதவி செய்யும் போது பயனை எதிர்பார்த்தே செய்கின்றனர். செய்த உதவியின் அளவே அவர்களும் திருப்பிச் செய்கின்றனர். அவர்கள் வாழைமரம் போன்றவர்கள் எனக் கூறுவர். ஏனென்றால் வாழை மரத்திற்கு அடிக்கடி நீர் ஊற்றினால் மட்டுமே அது பூ, காய், பழம் என்பனவற்றைத் தரும். தென்னைமரத்திற்குப் பலதடவைகள் நீர் ஊற்றினாற்றான் அது இளநீரையும் தேங்காயையும் தரும். சிலர் தென்னையைப் போன்றவர்கள். பல தடவைகள் உதவி செய்தால் மட்டுமே அவர்கள் திருப்பி உதவி செய்வர். ஆனால் சிலர் எப்போதாவது ஒரு நேரம் மட்டுமே யாராவது உதவி செய்தால் போதும் அந்த உதவியைத் தங்கள் வாணாளில் என்றுமே மறக்கமாட்டார்கள். தொடர்ந்து அந்நன்றிக்கீடாக ஏதாவது நன்மைகளைத் திருப்பிச் செய்து கொண்டே இருப்பர். அவர்கள் பனை மரம் போன்றவர்கள். பனைமரத்திற்கு ஒரு முறை நீர் ஊற்றினால் போதும் அது நுங்கு, பனம்பழம், பதநீர் எனப் பல பயன்களைத் தந்து உதவிக் கொண்டே இருக்கும். எனவே நாங்கள் எப்பொழுதும் பனை மரம் போன்று வாழப் பழக வேண்டும்.

வாசிப்போம்



விலங்குகளும் பருவகாலங்களும்

ஆர்க்டிக் கடல் குளிர்காலத்தில் உறைந்துவிடும். எனவே அங்கு வாழும் திமிங்கிலங்கள் குளிர்காலம் வருமுன்பே வடஅமெரிக்காவில் இருந்து கடல் வழியாகக் கலிபோர்ணியா வளைகுடாக் கடற்கரைக்குச் சென்றுவிடும். கடுங்குளிர் உள்ள பனிப் பகுதிகளில் வாழும் பறவைகள் குளிர்காலம் தொடங்குமுன்பே இந்தியா போன்ற வெப்ப நாடுகளுக்குப் பறந்து சென்றுவிடுகின்றன. துருவப்பகுதியில் வாழும் பனிக்கரடிகளுக்குப் பனிமூடிய குளிர்காலத்தில் உணவு கிடைக்காது அதனால் குளிர்காலம் வரும் முன்பே அதிக உணவை உட்கொண்டு உடலில் கொழுப்பை அதிகரித்துக் கொள்ளும். குளிர்காலத்தில் குகைகளுக்குச் சென்று தூங்கத் தொடங்கிவிடும். இந்தக் குளிர்காலத் தூக்கம் கோடைகாலம் வரும்வரை நீடிக்கும். இக்காலத்தில் இவ்விலங்குகள் உயிர்வாழ அவைகள் சேமித்து வைத்த கொழுப்பே உதவுகின்றது. இவ்வாறு பருவகாலங்கள் மாந்தரிடம் மட்டுமல்ல பூமியில் வாழும் அத்தனை உயிர்களிடத்திலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

வாசிப்போம்



ஒடியற் கூழ்

கல்லடி வேலுப்பிள்ளை ஒரு புலவர். அவர் வசாவிளான் என்னும் ஊரில் வாழ்ந்தார். இவரது வீட்டுக்குப் பக்கத்தில் பெரிய கல்லொன்று இருந்தது. இதனால் இவரைக் கல்லடி வேலுப்பிள்ளை என்று அழைத்தனர். இவருடைய நெருங்கிய நண்பர் சுப்பையா. அவர் மருத்துவராகப் பணிபுரிந்தார். ஒரு நாள் பகலில் புலவர் தன் நண்பனைக் காணப் புறப்பட்டார். வெய்யிலோ நெருப்பாகக் கொளுத்தியது. புலவருக்குக் களைப்புடன் பசியும் ஏற்பட்டது. தனது நண்பனின் வீட்டைச் சென்றடைந்தார். புலவரைக் கண்ட நண்பனும் மனைவியாரும் அவரை வரவேற்றனர். நண்பனின் மனைவியார் புலவர் களைப்பாக இருப்பதைத் தெரிந்துகொண்டார். அவரது களைப்பைப் போக்க உகந்தது ஒடியற்கூழ் என்பதை உணர்ந்து ஒடியற்கூழ் காய்ச்சத் தொடங்கினார். அவர் பானையில் நீரைக் கொதிக்க வைத்தார். அதனுள் ஒரு சிறங்கை அளவு அரிசியைப் போட்டு வேகவைத்தார். பின்பு மரவள்ளிக்கிழங்கு, பயற்றங்காய் , பயறு, பலாக்கொட்டை முதலியவற்றைப் போட்டார். உப்பையும் புளியையும் அரைத்த மிளகாய்க் கூட்டையும் அளவாய்ப் போட்டார். இறுதியாக ஒடியல் மாவைக் கரைத்து அதனுள் விட்டார். காய்ச்சிய கூழைப் பதமாக இறக்கி வைத்தார். புலவரும் நண்பரும் கூழ் குடிக்க அமர்ந்தனர். பலாவிலையை மடித்துக் கோலினர். நண்பனின் மனைவி கூழை அள்ளிஅள்ளி வார்க்க இருவரும் ஊதிஊதிக் குடித்தனர். கூழ் மிகவும் சுவையாக இருந்தது. என்ன அருமையான கூழ் என்று புலவர் வியந்தார்.



வாசிப்போம்

ஆறு

இயற்கை வளங்களில் சிறப்பான இடத்தைப் பெறுவன ஆறுகள். மாந்தனின் நாகரிகத் தோற்றத்திற்கு ஆறுகள் பெரிதும் துணைபுரிகின்றன. அத்துடன் மாந்தனின் பண்பாட்டு அடையாளத்திற்கும் ஆறுகள் களமாக உள்ளன. ஆறுகள் ஒரு நாட்டின் பொருளாதார வளத்திற்கு மிகவும் இன்றியமையாதவை. ஆற்று வளம் இல்லை என்றால் நாடு பொருளாதார வளத்திலும் பின்தங்கிய நிலைக்குச் செல்லும். ஆற்றுவளம் ஒரு நாட்டின் நீர்வளத்தைப் பெருக்கும். நீர்வளம் அந்நாட்டின் உற்பத்தி வளத்தைப் பெருக்கும். அதனாற்றான் ஒளவையாரும் மன்னனை வாழ்த்தும் போது ''வரப்புயர'' என்று வாழ்த்தினார். அதாவது ''வரப்புயர நீர் உயரும். நீர் உயர நெல் உயரும். நெல் உயரக் குடி உயரும். (குடி - மக்கள்) குடி உயரக் கோல் உயரும். கோல் உயரக் கோன் உயரும்'' என்றார். கவிஞர்கள் ஒரு நாட்டின் வளத்தைப் பற்றிக் கூறும்போது முதலில் அந்நாட்டின் நீர்வளத்தைப் பற்றித்தான் கூறுவர். நீர் இன்றி அமையாது உலகம் என்பர் சான்றோர். ''ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'' என ஒளவையாரும் கூறியுள்ளார். அத்தகைய நீர் வளத்தைப் பெருக்குவதற்குப் பெரிதும் துணைபுரியும் ஆறுகள் மலையிலிருந்து அருவியாய் வீழ்ந்து நிலத்தில் ஆறாக ஓடுகின்றன.

வாசிப்போம்



கார்காலம்

கார்காலம்; மழை பெய்து ஓய்ந்திருக்கிறது. நெல் வயல்களெல்லாம் செழித்து வளர்ந்திருக்கின்றன. பார்த்த இடங்களெல்லாம் மரஞ்செடிகொடிகள் பூத்துக் குலுங்குகின்றன. கொன்றை மரங்களில் கொத்துக் கொத்தாகப் பூக்கள் தூங்குகின்றன. வயல்களில் உழவரும் உழத்தியரும் களை பிடுங்குகின்றனர். வெள்ளம் உடைத்துப் பாயும் வரப்புகளை அடைப்பதற்காக ஆங்காங்கே தோளில் மண்வெட்டியுடன் சிலர் நிற்கின்றனர். வண்டுகளின் மெல்லிய இனிய முரலல் காதில் விழுகிறது. அதை மறைத்து நீர்ப்பறவைகளின் ஓலமும் மாரித்தவளைகளின் கத்தலும் ஆரவாரமாய்க் கேட்கின்றன. கார்காலமாதலால் பகற்பொழுது மங்கலாயிருக்கிறது. உடலுக்கு இனிமையான மெல்லிய குளிரான காலநிலை. ஆகா! இயற்கையோடு இணைந்து வாழ்வதுதான் எவ்வளவு இன்பமானது. உழவர் இவ்வியற்கைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தவாறு தங்கள் வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருக்கின்றனர். உழவர் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். பாட்டு இயற்றும் புலவரையும் பாராளும் அரசரையும் விட ஏரடிக்கும் உழவரே பெருமைக்குரியவர்.

வாசிப்போம்



சிறுவரும் குரங்கும்

அது ஒரு இளவேனிற் காலம். பொங்கிப் பாயும் ஓராறு. அந்த ஆற்றங்கரையோரம் சிறுவர் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். மழைத்துளிகள் மெல்லச் சிந்துகின்றன. இளவேனிற் காலத்து மழைத்தூறல் சிறுவர்களுக்கு இன்பமாக இருக்கின்றது. ஆற்றை அடுத்துள்ள ஒரு புறத்தில் உழவர்கள் வயலில் வேலை செய்து கொண்டிருக்கின்றனர். வயலோரங்களில் பல வகை மலர்கள் மலர்ந்துள்ளன. அவற்றின் அழகு மனதைப் பறிக்கிறது. மறுபுறத்திலே ஒரு மேட்டு நிலம். அம்மேட்டிலே மாவும் பலாவும் சோலையாக இருக்கின்றன. அச்சோலையின் மரங்களிலே உள்ள பலாக்கனிகளையும் மாங்கனிகளையும் குரங்குகள் பறித்து உண்கின்றன. அவற்றைக் கண்ட சிறுவர் கற்களால் குரங்குகளுக்கு எறிகின்றனர். அதனால் சினங்கொண்ட குரங்குகள் மாங்காய்களைப் பிடுங்கி எறிகின்றன. சிறுவர் மகிழ்வோடு ஓடியோடி மாங்காய்களைப் பொறுக்குகின்றனர். இவற்றைக் கண்டு களித்தவாறு உழவர் தங்கள் வேலைகளைச் செய்கின்றனர்.

வாசிப்போம்



மலர்கள்

இயற்கையின் படைப்புகள் எல்லாமே அழகுதான். அவை மனதிற்கும் ஐம்புலன்களுக்கும் இன்பம் தருபவை. அத்தகைய இயற்கையின் படைப்புகளில் மிகமிக விந்தையானவை மலர்கள். வண்ணவண்ண நிறங்களாலும் இனிய கமழ்வினாலும் மக்களைக் கவர்வன மலர்கள். உயர்ந்தோரை வரவேற்கும் போது மலர்மாலை அணிவித்து மகிழ்கின்றோம். இறந்தோரை அடக்கம் செய்யும் போது மலர்களால் அழகூட்டிப் போற்றுகின்றோம். இவ்வாறு மக்கள் வாழ்வில் எல்லா நிலைகளிலும் மலர் சிறப்பிடம் பெறுகிறது. எமது தாயகத்தில் தாமரை, அல்லி, குவளை போன்ற நீர் மலர்களும் மல்லிகை, முல்லை, நந்தியாவட்டை, செவ்வரத்தை போன்ற நில மலர்களும் எல்லாப் பருவங்களிலும் மலர்கின்றன. எம் மண்ணின் மலர்களில் காந்தளும் ஒன்று. காந்தள் மலர் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. இது கார்த்திகைத் திங்களில் பூப்பதால் இப்பெயரைப் பெற்றது. இம்மலர் தெற்காசியா எங்கும் மலர்ந்தாலும் தமிழீழ மக்களால் போற்றப்படும் மலராகச் சிறப்புப் பெற்றுள்ளது. கார்த்திகைப்பூ தமிழீழத் திருநாட்டின் தேசிய மலராகும்.

வாசிப்போம்



மலையகம்

ஈழத்தீவில் தமிழீழத்திற்கு வெளியே தமிழர்கள் வாழும் பகுதி மலையகம். இது இலங்கையின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. மலையகம் மழைவீழ்ச்சி உடைய பகுதியாதலால் நீர்வளம் மிகுந்தது. அதனால் இங்கு இளந்தென்றல் வீசும் இனிய சோலைகள்; முகில்கள் படர்ந்திருக்கும் வானுற ஓங்கிய மரங்கள்; ஆங்காங்கே மலைகளினூடே சலசலத்துத் தவழ்ந்து வரும் அருவிகள் இவை போன்ற கண்கொள்ளாக் காட்சிகள் நிறைந்திருக்கும். கண்டியை ஆங்கிலேயர் கைப்பற்றிய பின் மலையகத்தின் இயற்கை வளத்தைக் கண்டு மகிழ்ந்தனர். அவ்வளத்தினைப் பயன்படுத்தி தம் நாடுகளில் அதிக பொருளீட்டக் கூடிய தேயிலை, கோப்பி, இறப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்களைப் பயிரிட்டனர். இப்பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்கு உழைத்தவர்கள் தமிழகத் தமிழரே.

வாசிப்போம்



நிலம்

நிலம் எமது வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது. இந்நிலத்திற்றான் நாம் இருக்கின்றோம். நிலத்தில் உள்ள வளியைத்தான் உயிர்க்கின்றோம். நிலத்தின் அடியில் உள்ள நீரைத்தான் குடிக்கின்றோம். எமக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் உற்பத்தி செய்வதற்கு எமக்குப் பயன்படுவது நிலம். ஆனால் மாந்தன் தன் பேராசையால் குறைந்த காலத்தில் கூடிய விளைச்சலைப் பெறுவதற்கு வேதியற் பசளைகளைப் பாவிக்கின்றான். இதனால் நிலம் தன் வளத்தை இழக்கின்றது. உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவி செய்யும் நுண்ணுயிர்கள் அழிந்து போகின்றன. பூந்தாதுச் சேர்க்கைக்கு உதவும் வண்டுகளும் பூச்சிகளும் பெருமளவு அருகிப் போகின்றன. தொழிலாலைகளும் கட்டடங்களும் கட்டப்படுவதால் விளைநிலங்கள் இன்று குறைந்து வருகின்றன. அது மட்டுமன்றிக் குப்பை கூழங்களும் நீர்க்கழிவுகளும் எஞ்சியுள்ள நிலத்தை மாசுபடுத்துகின்றன. இவற்றைத் தடுக்காவிட்டால் விளை நிலங்கள் குறைவடைந்து எதிர்காலத்தில் உணவு உற்பத்தி குறைவடையும். இதனால் உணவுப் பற்றாக்குறை ஏற்படும்.

வாசிப்போம்



அறிவுரை

நாம் ஒருவருக்கு அறிவுரை கூறும்போது அவர்கள் மனம் அதனை ஏற்பதில்லை. அதேபோல் எங்களுக்கு யாரும் அறிவுரை கூறும்போது எங்கள் மனம் அதனை ஏற்க மறுக்கும். உண்மையில் இதைப்பற்றிச் சிறிது சிந்திப்போமானால் அறிவுரைகளை ஏற்கத் தயங்கமாட்டோம். "நான் நன்றாகத்தானே நடக்கிறேன் பெற்றோரும் ஆசிரியரும் எனக்கு ஏன் அறிவுரை கூறுகின்றனர்" எனக் கேட்கலாம். ஒருவரிடம் குறை கண்டால்தான் அறிவுரை கூறுவதென்பது இல்லை. இனியும் ஒரு குறையும் வரக்கூடாது என்பதற்காகத்தான் அறிவுரை கூறப்படுகின்றது. எங்கள் வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் அக்கறை உள்ளவர்கள்தான் எங்களுக்கு அறிவுரை கூறுவர். இவ்வுலகத்தில் எல்லாம் தெரிந்தவரும் இல்லை ஒன்றும் தெரியாதவரும் இல்லை. வாழ்க்கையில் எவற்றையெல்லாம் கேட்கின்றோம் படிக்கின்றோம். எங்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள் கூறும் அறிவுரையைக் கொஞ்சம் கேட்டால் என்ன? எங்களை விட அவர்களிடம் நிறையப் பட்டறிவுகள் இருக்கும். தாங்கள் பட்ட இன்னல்களை நாங்கள் படக்கூடாது என்பதே அறிவுரை கூறுவோரின் நோக்கம். இத்தகைய அறிவுரைகளைக் கேட்பதில் என்ன தவறு.

வாசிப்போம்



ஏழைக் குடியானவன்

ஓர் ஊரில் ஏழைக் குடியானவன் ஒருவன் இருந்தான். அவன் ஏழையாக இருந்தாலும் தன் மனைவி மீதும் தன் ஒரே மகன் வேழன் மீதும் மிகவும் அன்புள்ளவன். அவன் ஏழை என்றபடியால் ஊர் மக்கள் அவனை மதிப்பதில்லை. ஆனால் அவன் ஊர்மக்களிடம் மிகவும் பணிவுடனும் மதிப்புடனும் நடந்து கொள்வான். வீடுகளில் கூலிவேலை செய்தே தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தான். எப்பாடுபட்டும் தன் மகனைப் படிப்பில் பெரியவனாக்க வேண்டும் என்று பேராவல் கொண்டிருந்தான். இதற்காக இரவுபகல் ஓயாது கூலி வேலை செய்தான். வேழனும் தன் தந்தையின் ஆசையை நிறைவேற்றும் எண்ணத்துடன் கண்ணுங்கருத்துமாகப் படித்து வந்தான். "உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? நீ ஏன் இவ்வளவு துன்பப் படுகிறாய் உன்னுடைய பிள்ளை படிக்கமாட்டான்" என்று ஊரார் அவனைப் பகடி பண்ணினர். ஆனால் அவன் மனங் கலங்கவில்லை. வேழன் உயர்நிலைத் தேர்வில் கூடுதலான புள்ளிகள் பெற்று மருத்துவத்துறைக்குத் தெரிவானான். வேழனின் கல்லூரி முதல்வரும் ஆசிரியர்களும் வேழனுக்குப் பாராட்டு விழா நடத்தினர். வேழனின் தாய் தந்தையரை வாழ்த்தி மதிப்பளித்தனர். வேழன் மிகவும் மகிழ்ந்தான். அப்போது வேழனுக்கு வள்ளுவர் எழுதிய

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல் -

என்ற குறள் நினைவிற்கு வந்தது. தனது தந்தையை நினைத்துப் பெருமைப்பட்டான்.





வானமுள்ளவரை

புதிதாகப் பழகும் போது பெரும்பாலானோர் நன்றாகப் பழகுவர். அதில் ஒன்றும் சிறப்பில்லை. முதலில் எல்லோரும் நன்றாகவே பழகுவர். புதிய மாணவர் ஒழுங்காகவே நடந்து கொள்வர். புதிய ஆசிரியரும் நன்றாகவே கற்பிப்பர். அவ்வாறே புதிய நட்பும் சிறப்பானதுபோல் இருக்கும். எவ்வளவு பழமையானாலும் அதன் சிறப்புக் குன்றாமல் ஒளி விடும் வாழ்க்கைதான் நல் வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டு. பொன்முலாம் பூசியது போன்று சில உறவுகள் தொடக்கத்தில் நன்றாகவே இருக்கும். போகப் போக அவர்களின் உண்மை முகம் வெளிப்படும். அவ்வேளைகளில் மனதிற்குத் துன்பமாக இருக்கும். உண்மை என்று நாம் உயிராகப் பழகிய உறவு பொய்த்துப் போகும்போது மனம் துவண்டுபோகும். பொன்னால் செய்யப்பட்ட பொருள் தேயுமே தவிர என்றும் அதன் இயல்பு மாறாது. பழமைப்பட்ட பிறகும் அதன் தன்மையோ, இயல்போ மாறாத உறவே என்றும் இனிய உறவாகும். அது வானமுள்ள வரை நிலைத்திருக்கும்.





மூலமொழி

உலகில் பல மொழிகள் பேசப்படுகின்றன. ஒவ்வொரு மொழியும் மூலமொழி அல்ல. மூலமொழிகளில் இருந்தே ஏனைய பல மொழிகள் உருவாகியுள்ளன. எடுத்துக்காட்டாக இலத்தீன் மொழியில் இருந்து பிரஞ்சு, இத்தாலி போன்ற பல மொழிகள் உருவாகின. தமிழ் ஒரு மூலமொழியாகும். இம் மொழியில் இருந்தே பல திராவிட மொழிகள் உருவாகின. கன்னடம், உருது, மலையாளம், தெலுங்கு போன்ற பல திராவிட மொழிகள் தமிழையே மூலமொழியாகக் கொண்டவை. இத்தகைய பழமையும் சிறப்பும் வாய்ந்த தமிழ்மொழி எங்கள் தாய்மொழி என்பதில் பெருமை கொள்வோம். இன்று எங்கள் தமிழ் மொழி செம்மொழி என்ற உயர் தகுதியையும் பெற்றுள்ளது. இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இத்தகைய சிறப்புவாய்ந்த எம் மொழியில் பல சிறந்த இலக்கியங்கள் காணப்படுகின்றன. ஐம்பெருங்காப்பியங்கள் மிகவும் போற்றத்தக்கவையாக இருக்கின்றன. இதில் மிகவும் காலத்தால் முந்தியது சிலப்பதிகாரம். இது இளங்கோவடிகளால் எழுதப்பட்டது. இந்நூல் தமிழரது பண்பாட்டு வரலாற்றைக் கூறுகின்றது.

வளர் தமிழ் 8

வாசிப்போம்

வாசிப்போம்



மகாகவி

மகாகவி உருத்திரமூர்த்தி ஒரு சிறந்த கவிஞர். இவர் இலங்கையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவரது கவிதைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. இவர் வாழ்ந்த காலத்துக் குமுகாயம் ஏற்றத்தாழ்வுகளையும் தகுதி வேறுபாடுகளையும் கொண்டதாக இருந்தது. இதனால் இவரை இக்குமுகாயம் ஒதுக்கியது. இவரது சிறந்த படைப்புகளான கவிதைகளையும் கண்டு கொள்ளவில்லை. ஆனால் இவரது கவிதைகள் எளிமையானவையாகவும் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவனவாகவும் சிறந்த கருத்துக்களை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்திருந்தன. இவர் வாழ்ந்த காலத்துக் குமுகாயச் சீர்கேடுகளே இவரது கவிதைகளின் கருவாக அமைந்திருந்தன. படிப்போர் நெஞ்சங்களில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவனவாக இக்கவிதைகள் அமைந்திருந்தன. குமுகாயக் குறைபாடுகளால் மனம் நொந்து போகும் உள்ளங்களுக்கும் தோல்வியைக் கண்டு துவண்டு போகும் நெஞ்சங்களுக்கும் ஆறுதலும் தன்னம்பிக்கையும் அளிப்பனவாக கவிஞர் உருத்திரமூர்த்தியின் கவிதைகள் காணப்படுகின்றன. மீண்டும் தொடங்கும் மிடுக்கு, காட்டு மல்லிகை, புதியதோர் வீடு போன்ற கவிதைகள் இவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

வாசிப்போம்



எங்கள் மண்

இலங்கை மண்ணில் தமிழர் வரலாற்றில் பல தமிழ் மன்னர்களின் வீரஞ்செறிந்த வரலாறுகள் காணப்படுகின்றன. அவற்றுள் எமக்குக் கிடைத்த வரலாறுகள் மிகச் சிலவே. அந்த வகையில் ஈழத்தில் தலைசிறந்த ஆட்சி செய்த மன்னர்களில் எல்லாளமாமன்னன், சங்கிலியன், கயிலைவன்னியன், பண்டாராவன்னியன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். எல்லாளமாமன்னன் இலங்கை முழுவதும் நாற்பத்துநான்கு ஆண்டுகள் சிறப்பாக அறந்தவறாது ஆட்சி புரிந்தான். இலக்கியங்கள் இம்மன்னனைப் புகழ்ந்து போற்றுகின்றன. சங்கிலி மன்னன் போர்த்துக்கேயருக்கு அடங்காது திறை செலுத்தாது மாற்றானிடம் மண்டியிடாது வீரமுடன் ஆட்சி செய்து உயிரைவிட மானமே பெரிதென்று உயிர்நீத்தான். அடுத்து வன்னியின் பொற்காலம் என்று அழைக்கப்படும் காலம் கயிலைவன்னியன், பண்டாரவன்னியன் போன்றோரது ஆட்சிக்காலமாகும். கயிலைவன்னியன் போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் திறை செலுத்தாது தலை வணங்காது முப்பத்து நான்கு ஆண்டுகாலம் ஆட்சி செய்தான். பண்டாரவன்னியன் ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்கும் அஞ்சாது ஆங்கிலேயரின் வேட்டெஃகங்களைக் (பீரங்கிகளை) கைப்பற்றி அவர்களுடன் வீரப்போர் புரிந்தான். அறத்திற்கு மாறான முறையில் ஆங்கிலேயர் அவனைக் கொன்றனர். இவ்வாறு தமிழ் மன்னர்களால் காலங்காலமாக ஆளப்பட்டு வந்த மண் எங்கள் மண்.

வாசிப்போம்



போரறம்

பண்டைத் தமிழ் மன்னர்கள் பகை நாட்டின் மீது போர் தொடங்குவதற்கு முன்பு கூட மாந்தநேயத்தைப் போற்றிப் பேணி வந்துள்ளனர். போர் தொடங்குவதற்கு முன்னர் பகை நாட்டில் உள்ள பல்வேறு மக்களுக்கும் போர் தொடங்கும் செய்திகளைப் பறை அறைந்து அறிவிப்பர். ஆசிரியர்கள், முதியோர், குழந்தைகள், பெண்கள், போரோடு தொடர்பில்லா அனைத்து மக்களும் பாதுகாப்பான அரண்களைத் தேடிச் சென்று விடுங்கள். போரோடு தொடர்புடைய பகைவர்களே தாக்கப்படுவர். நாங்கள் கடும் போர் தொடங்க உள்ளோம் என்று பறை அறைந்து அறிவித்த பின்னரே போர் தொடங்குவர். ஆனால் இன்றைய போர்முறையில் எங்கோ இருந்து கொண்டு ஓர் ஆழியை அழுத்திப் போர்க்களத்தில் ஒரு புல்பூண்டு கூட மிஞ்சாமல் அழித்துவிடக் கூடிய போர்க்கருவிகள் பெருகி விட்டன. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் போர்க்கருவிகள், மூச்சோடு உள் நுழைந்து ஆளை எரிக்கும் நச்சுவளிக் குண்டுகள், கொத்தணிக் குண்டுகள் என்று எத்தனையோ குண்டுகள் மக்களைக் கொன்று குவிக்கின்றன. இன்று போரறம் முற்று முழுதாக மீறப்பட்டு வருகின்றது. மாந்த உயிர்களுக்கு மதிப்பின்றிப் போய்விட்டது.





பெயரின் சிறப்பு

தமிழிலக்கியங்களில் ஔவையார் என்னும் பெயரினை உடையோர் பலர் காணப்பட்டனர். கழககாலத்தில் வாழ்ந்த ஔவையார் பெரும் புகழுக்குரியவர். இவரே ஔவையார் என்று பெரியவர்களாலும் ஔவைப்பாட்டி என்று சிறுவராலும் அழைக்கப்பட்டவர். இவ் ஔவையார் மீது பிற்காலத்தில் மக்களுக்கிருந்த பெருமதிப்பால் இவருக்குள்ள சிறப்புக் கருதி இவருக்குப் பின்வந்த பெண்புலவர்கள் ஔவையாரின் பெயரைத் தமக்கு வைத்துக் கொண்டனர். வேறு சிலர் தாம் இயற்றிய நூல்கள் நெடுங்காலம் விளங்க வேண்டும் என்ற எண்ணத்தில் அந்நூல்களை எழுதிய ஆசிரியரின் பெயராக ஔவையாரின் பெயரை வைத்ததாகக் கூறுகின்றனர். இதனால் வரலாற்றில் ஔவையார் பற்றிய குழப்பம் காணப்பட்டாலும் கழககாலத்தில் பெருமையுடன் விளங்கிய ஔவையார் ஒருவரே என்பதில் எந்த ஐயமும் இல்லை. இவர் தமிழுக்கு ஆற்றிய பணி அளப்பரியது. கடையெழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் அருங்கனியான நெல்லிக்கனியைக் கொடுத்ததும் கழககால ஔவையாருக்கே. திருக்குறளை அரங்கேற்றச் செய்தவரும் இவ் ஔவையாரே! இவர் தமிழுக்காற்றிய பணி அளவற்றது.

வாசிப்போம்



மணிமேகலை

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று மணிமேகலை. இதை எழுதியவர் சீர்த்தலைச்சாத்தனார். கோவலன் மாதவியின் மகள் மணிமேகலை. இவளுடைய கதையைக் கூறும் காப்பியம் மணிமேகலை. இவள் அறிவும் அழகும் நிரம்பியவள். இவளின் தோழி சுதுமதி. இவள் தன் தோழியுடன் பூஞ்சோலைக்குப் பூப்பறிக்கச் சென்றாள். அங்கு சோழ நாட்டு அரசன் மாவலன்கிள்ளி என்பவனின் மகன் உதயகுமாரன் மணிமேகலையைக் கண்டு விருப்பங் கொண்டான். உதயகுமாரன் தன்னை விரும்புவதை அறிந்து கொண்ட மணிமேகலை தோழியுடன் பளிங்கறை ஒன்றில் பதுங்கிக் கொண்டாள். மணிமேகலையும் சுதுமதியும் அவ்விடத்தை விட்டு வெளியேற முடியாது அஞ்சிக் கொண்டிருந்த பொழுது மணிமேகலா என்ற தெய்வம் மணிமேகலையை வான் வழியாகத் தூக்கிச் சென்று மணிபல்லவம் என்ற தீவில் இறக்கிவிட்டது. மணிபல்லவம் என்பது இன்றைய நயினாதீவாகும். மணிமேகலையின் தந்தையான கோவலன் கொல்லப்பட்ட பின் மணிமேகலை தாயுடன் சேர்ந்து தானும் துறவு பூண்டாள்.

வாசிப்போம்



விளக்கேந்திய பெருமாட்டி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருசியாவிற்கும் துருக்கிக்கும் இடையில் போர் மூண்டது. பிரித்தானியாவும் பிரான்சும் துருக்கிக்கு உதவி செய்தன. அப் போரிலே பிரித்தானியப் படைவீரர் பலர் காயமடைந்தனர். அவர்களுக்குப் போதுமான மருத்துவ வசதிகள் இருக்கவில்லை. விளக்குகளோ மெழுகுவர்த்திகளோ இன்றி நிலாவொளியிலேயே மருத்துவ உதவி அளிக்கப்பட்டது. நாளுக்கு நாள் காயமடைந்தவர்களுடைய தொகை கூடியது. இச்செய்தியினை இங்கிலாந்தில் இருந்த செல்வி புளோரன்சுநைற்றிங்கேல் அறிந்தார். அவர் தமது கடமையை உணர்ந்தார். அவர் கையில் ஒரு விளக்குடன் சென்று காயப்பட்ட நோயாளிகளுக்குப் பணி புரிந்தார். அவர்களுக்கு ஆறுதல் மொழி கூறினார். கடுமையான உழைப்பின் காரணமாக நோய்வாய்ப்பட்டார். தாய் நாட்டுக்குத் திரும்பும்படி அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் அதற்கு அவர் மறுத்துவிட்டார். தனது நோயையும் பாராமல் தொடர்ந்து பணியில் ஈடுபட்டார். போர் முடிவடைந்த பின்னரே தாய்நாடு திரும்பினார். கையில் விளக்குடன் சென்று பணிபுரிந்ததனால் ‘விளக்கேந்திய பெருமாட்டி’ என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். தாய்க்குலத்திற்கே பெருமை சேர்த்த இப் பெருமாட்டி 13.08.1910இல் தனது தொண்ணூறாவது அகவையில் இயற்கை எய்தினார்.

வாசிப்போம்



புத்தரும் மகனை இழந்த தாயும்

ஒரு நாள் ஒரு பெண் இறந்த தன் குழந்தையுடன் அழுதபடியே புத்தரைத் தேடி வந்தாள். புத்தர் “பெண்ணே ஏன் நீ அழுகிறாய் உனக்கு என்ன நடந்தது” எனக்கேட்டார். அப்போது “ஐயா இது எனது குழந்தை. இது இறந்து விட்டது. எனக்கிருந்த ஒரே பிள்ளை இவன்தான். இவனைப் பிரிந்து என்னால் உயிர் வாழ முடியாது. என் துயரைக் கண்ட சிலர் உங்களிடம் சென்று முறையிட்டால் என் பிள்ளையை உயிர் பெறச் செய்வீர்கள் எனக் கூறினர். அதனால் உங்களைத் தேடி வந்தேன் அருள் கூர்ந்து என் பிள்ளையை உயிர் பெறச் செய்யுங்கள்” என்றாள். அதைக்கேட்ட புத்தர் “பெண்ணே நான் சொன்னபடி நீ செய்தால் உனது மகனை நான் உயிர்ப்பித்துத் தருகிறேன்” என்றார். “இறப்பே நிகழாத வீட்டில் கடுகு வாங்கி வா” என்றார். அந்தப் பெண்ணும் உடன்பட்டாள். ஒவ்வொரு வீடாகச் சென்று கடுகு கேட்டாள். என் அப்பா இறந்து ஒருமாதம், என் பிள்ளை இறந்து ஓராண்டு என்று இப்படியே எல்லோர் வீட்டிலும் இறப்பு நிகழ்ந்துள்ளதாகக் கூறினர். அதனால் அவளால் ஒரு வீட்டிலும் கடுகு வாங்க முடியவில்லை. அதன் பின் மகனை இழந்த துயரம் அவள் மனதில் இருந்து நீங்கி இருந்தது. இறப்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்பதை விளக்கவே புத்தர் இவ்வாறு தனக்குக் கூறி இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட அப்பெண் புத்தரை வணங்கி விடை பெற்றாள்.

வாசிப்போம்



விடுதலை

தன் மண்ணில் தன் வீட்டில் தன் உழைப்பில் தன் மொழியைப் பேசி வாழ்ந்த ஓர் இனம் மாற்றாரின் வல்லாட்சிக்கு உட்படும் பொழுது அதில் இருந்து விடுபட முனைவதே விடுதலை உணர்வாகும். இந்த விடுதலை உணர்வு விலங்குகளிற்கும் உண்டு. கூட்டில் அடைக்கப்படும் கிளி அதிலிருந்து விடுபடத் துடிக்கிறது. கட்டி இருக்கும் மாடு கட்டை அறுத்துத் தன் எண்ணப்படி மேய நினைக்கிறது. உலகம் முழுவதும் உள்ள பெரும்பான்மை இனங்கள் சிறுபான்மை இனங்களை அடக்கி ஆள நினைக்கின்றன. அமைதி வழியில் விடுதலை தேட நினைக்கிறது சிறுபான்மை இனம். ஆனால் வல்லாட்சி புரிவோர் அதனை வன்முறையால் தடுக்கின்றனர். அவ்வாறு அடக்கப்படும் இனம் தன் வலிமையைப் பயன்படுத்தி விடுபட நினைக்கின்றது. இதுவே விடுதலைப் போராட்டமாகும். இவ் விடுதலைப் போரில் வெல்வதற்கான முயற்சியில் தங்கள் உயிர்களையும் ஈகம் செய்யத் துணிகின்றனர். இதில் இருந்து விடுதலைப் போராட்டத்தின் மேன்மையை அறிந்து கொள்ள முடியும். இன்று உலக நாடுகள் முழுவதும் அடக்கப்பட்ட இனங்கள் அதற்கு எதிராக விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன.

வாசிப்போம்



நான் யார் தெரியுமா?

எனது இன்றைய நிலை மிகவும் கவலைக்குரியதொன்றாக இருக்கின்றது. என்னைத் தேடுவார் யாருமே இல்லை. இந் நிலையை நான் யாருக்குச் சொல்லி அழுவது? என் துன்பத்தை நீக்குபவர் யார்? அன்பான மாணவர்களே! நான் உங்கள் இன்ப துன்பத்தில் பங்கு கொண்டவன் என்பதனால் உங்களுக்கே என் கதையைக் கூறுகின்றேன். தற்போது எனது வாழ்விடம் ஒரு உடைந்த பெட்டி. அங்கு எனக்கு உறக்கமில்லை. அமைதியில்லை. நாளும் எலிகள் தங்கள் கூரிய பற்களால் என்னைக் கொறித்துக் கொறித்து என் உடல் புண்ணாகி விட்டது. வெளி உலகில் நான் கண்ட காட்சியில் ஒன்று என் இனத்தவரில் சிலர் எரிக்கப்படுகின்றனர். நானும் எரிக்கப்பட்டு விடுவேனோ என்ற அச்சம் எனக்கும் வந்து விட்டது. உங்களைப் போன்ற மாணவர்கள் என்னைப்பற்றிக் கூறிய புகழுரைகள் இன்றும் என் காதில் ஒலிக்கின்றன. உங்கள் கைகளில் நான் இருக்கும் போது "புத்தகம் என்பது ஓர் அறிவுப் பெட்டகம்", "புதிய புதிய கருத்துக்களை அள்ளித் தரும் சுரங்கம்" எனக் கூறினீர்கள் ஆனால் இப்போ என் நிலையை என்னவென்று சொல்வேன். மக்களுக்கு உயர்ந்த பணியை வழங்கும் யாவருக்கும் என் நிலைதான் வருமா? எது எப்படியோ! நான் வாழுங் காலத்தில் செய்த நன்மைகளை என் இறுதிக் காலத்தில் எண்ணிப் பெருமையடைகிறேன். நான் யார் தெரியுமா? நான் தான் பழைய புத்தகம்.

வாசிப்போம்



மறைமலையடிகள்

சுவாமி வேதாசலத்தின் மகள் நீலாம்பிகை அம்மையார். தம் தந்தையாரையே நல்லாசிரியராகப் பெறும் பேறு பெற்றார். தம் தந்தையாரிடம் தமிழும் இசையும் பயின்றார். நீலாம்பிகை தன் பதின்மூன்றாம் அகவையிலேயே மேடையேறிச் சொற்பொழிவாற்றினார். ஒரு நாள் மாலையில் தந்தையுடன் நீலாம்பிகை சோலைக்குச் சென்றிருந்தார். அப்போது தந்தையார்

“பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்...

என்னும் வள்ளலாரின் பாடலை உள்ளமுருக உயிருருகப் பாடி முடித்தார். பின்னர் மகளிடம் “நீலா! இப்பாடலில் உள்ள தேகம் என்னும் வடசொல்லுக்கு மாறாக யாக்கை என்னும் தமிழ்ச்சொல் கையாளப்பட்டிருந்தால் இப்பாடலின் சொல்லோசை மேலும் இனிமையாக இருக்குமன்றோ! பிறமொழிச் சொற்கள் தமிழில் கலப்பதனால் தமிழின் இனிமை குறைகிறது” என்றார் தந்தையார். அதைக் கேட்ட மகள் தந்தையாரிடம் “அப்படியானால் நாம் இனிப் பிறமொழிச் சொற்களை நீக்கித் தனித்தமிழிலேயே பேசுதல் வேண்டும்” என்றார். மகளின் அன்பும் அறிவும் கலந்த வேண்டுகோளை ஏற்று சுவாமி வேதாசலம் என்னும் தன் வடமொழிப் பெயரைத் தனித்தமிழில் ‘மறைமலையடிகள்’ என்று மாற்றிக் கொண்டார். அதைத் தொடர்ந்து தனித்தமிழுக்காகப் போராடத் தொடங்கினார்.

வாசிப்போம்



அன்றைய மாந்தன்

பழைய கற்கால மாந்தன் நாடோடியாகத் திரிந்தான். வேட்டையாடுதல் அவனுடைய தொழிலாகும். இயற்கையின் சீற்றத்திற்கும் கொடிய காட்டு விலங்குகளின் தாக்குதலுக்கும் அவன் இலக்கானான். அக்காலப் பகுதியின் தொடக்கத்தில் அவன் கல்லை உடைத்துக் கரடுமுரடான கருவிகளைச் செய்தான். கோடரிகளைச் செய்து கொத்துவதற்கும் வெட்டுவதற்கும் பயன்படுத்தினான். விலங்குகளை வேட்டையாடி அதன் இறைச்சியை உணவாக உட்கொண்டான். விலங்குகளின் பல், எலும்பு, மருப்பு போன்றவற்றையும் கருவியாகப் பயன்படுத்தினான். கற்கால மாந்தன் குகைகளில் வாழ்ந்தான். விலங்கின் தோலை ஆடையாக உடுத்திக் கொண்டான். கற்களை ஒன்றுடன் ஒன்று உரசி நெருப்பைக் கண்டு பிடித்தான். நெருப்புக் கண்டுபிடிப்பு அவன் வாழ்கை முறையில் சில மாற்றங்களை ஏற்படுத்தியது. இறைச்சியைப் பச்சையாக உண்ட மாந்தன் அதனை நெருப்பில் வாட்டி உண்ணத் தொடங்கினான். தீயின் உதவியால் காட்டு விலங்குகளை விரட்டித் தன்னை அவற்றிடமிருந்து காப்பாற்றிக் கொண்டான். கற்கால மாந்தன் ஓவியக்கலையில் சிறந்து விளங்கினான். அவன் வாழ்ந்த குகைளின் சுவர்களிலும் கூரைகளிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்களின் மூலம் அவனுக்கு அக்கலையிலிருந்த ஆற்றலை அறியலாம். கொம்புகளிலும் யானை மருப்புகளிலும் பல அழகான உருவங்களைச் செதுக்கினான். இவற்றை அவனுடைய சிற்பக்கலைக்குச் சான்றாகக் கொள்ளலாம்.

வாசிப்போம்



சிலந்தி

ஒருமுறை மன்னன் ஒருவன் பகை நாட்டின் மீது படையெடுத்தான். ஆனால் அப்போரில் அவன் தோற்றுவிட்டான். அதனால் மன்னன் பெரிதும் கவலைப்பட்டான். எதிரியாற் தோற்கடிக்கப்பட்டதைத் தனக்கேற்பட்ட மானக்கேடாக மன்னன் எண்ணினான். தன் உயிரை விட்டுவிடலாமா என்று கூட நினைத்தான். கவலையுடன் அரண்மனைக் கட்டிலில் படுத்திருந்தான். ஆனால் அவனால் தூங்கமுடியவில்லை. மேலே பார்த்துக்கொண்டிருந்தான். சுவரில் ஒரு சிலந்தி ஒரு பூச்சியைப் பிடிக்கப் பாய்ந்தது. பூச்சி தப்பிவிட்டது. ஆனால் சிலந்தியோ விடாமல் மீண்டும் மீண்டும் பாய்ந்தது. ஏழாவது முயற்சியில் சிலந்தி பூச்சியைப் பிடித்தது. இதனைப் பார்த்துக் கொண்டிருந்த மன்னன் "ஒரு முறை போரில் தோற்று விட்டதற்காக நான் மனங்கலங்கக் கூடாது. இந்தச் சிலந்தியைப் போல் மீண்டும் மீண்டும் முயற்சி செய்தால் வெற்றி எனக்கே." எண்று நினைத்தான். உடனே போர்முரசு அறையப்பட்டது. போர் தொடங்கியது. மன்னன் இரண்டாவது முறையிலே போரில் பெருவெற்றியீட்டினான். தனது வெற்றிக்குக் கரணியமாக இருந்த சிலந்திக்கு மனதால் நன்றி கூறினான்.தோல்வியைக் கண்டு துவண்டுவிடக் கூடாது தொடர்ந்து முயன்றால் வெற்றி நிச்சயம் என்று மன்னனுக்குப் புரிய வைத்தது சிலந்திதானே!

வாசிப்போம்



பாரி கபிலர்

பாரியைச் சூழ்ச்சியினால் வீழ்ச்சியுறச் செய்கின்றனர் முடியுடை மூவேந்தர். பாரி அரசாண்ட பறம்புமலை மூவேந்தரின் படையெடுப்பால் கைப்பற்றப்பட்டு, பாரி மன்னனும் கொல்லப்படுகின்றான்.

பாரியின் உயிருக்குயிரான நண்பர் கபிலர். பாரியின் பிள்ளைகளான அங்கவை, சங்கவை என்ற இருவரையும் அழைத்துக் கொண்டு தப்பிச் செல்கிறார் கபிலர். பாரியின் பிரிவு தாங்காமல் வடக்கிருந்து உயிர் நீக்கக் கருதிய கபிலர் பாரியின் பிள்ளைகளின் திருமணத்துக்காகக் காத்திருந்தார். ஓர் இளவரசனுக்கு பாரியின் பிள்ளைகளை மணம் முடித்து வைப்பதற்காக அழைத்துச் சென்றார். அவர்களை அரசனுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார். கபிலர் அறிமுகப்படுத்தும் அழகு சுவைக்கத்தக்க கற்பனையாக அமைகின்றது.

பாரி தேரீந்த கொடைச் சிறப்பு அக்காலத்தில் பெரும் புகழாகக் கொள்ளப்பட்டது. தனது ஆட்சியில் ஒரு முல்லைக் கொடி கூட கொழுகொம்பின்றி, தாங்கலின்றி அல்லல்படக் கூடாதே என்ற அரும்பெரும் நோக்கில் தான் ஊர்ந்து வந்த தேரை அந்த முல்லைக்கொடிக்குக் கொழுகொம்பாக நிறுத்திவிட்டுக் கால்நடையாகப் பறம்பு மலைக்கு வந்து சேர்ந்தான் பாரி.

துயரைக் கண்டவுடனேயே துடைத்தெறியும் முயற்சியில் ஈடுபட்ட அவனது பரிவுணர்ச்சி மிகவும் போற்றப்பட வேண்டியதே.

இயல்பாகவே தனக்குரிய கொழுகொம்பைத் தேடிப் படரும் முல்லைக்கொடியின் மேலேயே அரசனுக்கு இவ்வளவு இரக்கம் அக்கறை இருந்திருக்குமானால் தன்னை நம்பித் தங்கியிருக்கும் குடிமக்களின் குறைகளைக் களைவதில் அவனது அக்கறை எப்படி இருந்திருக்கும் என்பதை எடுத்துக்காட்டும் சிறப்புடையது இந்த முல்லைக்குத் தேரீந்த கொடை.

இளவரசரிடம் கபிலர் கூறுகிறார் “எல்லா அரசர்களும் தன்னைப் புகழ்ந்து பாடும் புலவர்களுக்குத்தான் பரிசு கொடுப்பார்கள் ஆனால் பாரியோ அதற்கு மாறானவன். தன்னைப் புகழ்ந்து பாடாத முல்லைக் கொடிக்குக் கூட நெடுந்தேரைக் கொடுத்த பெருங்கொடையாளன். அவனது மக்களே இவர்கள்” என அறிமுகப்படுத்துகிறார் புலவர் கபிலர்.

வாசிப்போம்



நான்கு கோடி

சோழமன்னன் அவையில் ஒரு நாள் புலவர்களுக்கு அதிர்ச்சி தரும் அறிவிப்பொன்று கிடைத்தது. தன் அவையில் இருந்த புலவர்களை நோக்கிய சோழமன்னன் ''புலவர்களே! நாளை விடியுமுன் நீங்கள் நாலு கோடிப் பாடல்கள் பாடி வருதல் வேண்டும் இது என் கட்டளை'' என்றான். இதற்கு நாம் யாது செய்வோம்? மன்னரின் கட்டளையை எப்படி நிறைவேற்றுவோம்? என்று வாடிய முகத்தினராய் வருந்தினர் புலவோர். அப்பொழுது ஔவையார் அவ்வழியால் வந்து கொண்டிருந்தார். புலவர்களைக் கண்டதும் அவர் உள்ளம் மகிழ்ந்தது. புலவர்களை அவர் நெருங்கிய போதுதான் அவர்களது முகவாட்டத்தைக் கவனித்தார். புலவர்களே! நீங்கள் மிகவும் மனம் சோர்ந்திருப்பது ஏன்? என்று பரிவுடன் வினாவினார். அப்புலவர்கள் ஔவையாரை நோக்கி ''அம்மையே! அரசன் நாளை பொழுது விடிவதற்கு முன் நாலுகோடிப் பாடல்கள் இயற்றி வர வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளான். அதனை நினைத்தே நாம் வருந்துகின்றோம்!'' என்றனர். ''இதற்காகவா நீங்கள் கவலைப்படுகிறீர்கள்? கவலையை விடுங்கள் நான் இப்பொழுதே நான்கு கோடிப் பாடல்களைப் பாடுகிறேன் எழுதிக் கொள்ளுங்கள்'' என்று கூறிப் பாடத் தொடங்கினார்.

மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்


உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தன்மனையில்
உண்ணாமை கோடி பெறும்

கோடி கொடுத்தும் குடிப் பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்

கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்

நான்கே நான்கு குறட்பாக்களில் கோடி என்ற நான்கு சொற்கள் வருமாறு பாடிய ஔவையாரின் புலமை கண்டு புலவோர் அனைவரும் அவரைப் பாராட்டினர். அவரும் நன்றி கூறி விடை பெற்றார். மறுநாட் காலை அரசவையில் தாம் பாடி வந்ததாகக் கூறி இப்பாடல்களை புலவோர் மன்னன் முன் பாடினர். பாடல்களைக் கேட்டு மன்னன் ஐயம் கொண்டான். இவை இவர்களால் பாடப்பட்டவை அல்ல. இவற்றைப் பாடியவர் பெரும் புலவராகவே இருக்கவேண்டும். ஔவையார் இங்கு வந்திருக்க வேண்டும் எனக் கருதினான். உண்மையைக் கண்டறிந்தான். உடனே ஔவையாரை அழைத்து வரச் செய்து அவருக்குப் பரிசில்கள் பல வழங்கிப் பாராட்டினான்.

வாசிப்போம்



யார் இந்த இளைஞன்?

கதிரைமலையூடாகச் சங்குவேலி செல்லும் சாலையில், இறங்குதுறைக்கும் கதிரைமலைக்கும் இடையில், கதிரைமலையின் கிழக்கு எல்லையில் அடர்ந்து கிடந்த காட்டின் ஓரமாக அமைந்திருந்தது கதிரைமலைச் சிவன்கோவில். கோவிலின் பின்புறம் அடர்ந்த காடாக இருந்தாலும் முன்புறம், கட்புலனைக் கடந்த தூரம் வரை, வழுக்கையாறு ஊட்டி வளர்க்கும் நன்செய்யும் புன்செய்யும் (நன்செய் - நெல்வயல். புன்செய் - சிறுகூல வயல்) செழித்துக் கிடந்து கண்களைக் குளிர்வித்தன.

நாணித்தலை குனியும் மடமையுள் ஆழ்ந்த பெண்களைப் போல அல்லாமல், அறிவுச் செருக்கால் நிமிர்ந்து நிற்கும் நெறி தவறாத மங்கையரைப் போல, இன்னும் முற்றாத நிமிர்ந்த இளங்கதிர்களையுடைய நெற்பயிர்கள் காற்றை எதிர்த்தாடிக் கொண்டிருந்தன. ஆங்காங்கே மேட்டுப் பாங்கான பகுதிகளில் பச்சைத் திடல்களாகத் தோன்றிய கதலித் தோட்டங்களும் எண்ணை குழைத்த கரும்பச்சைச் சாயம்போல் மினுங்கும் வெற்றிலைக் கால்களும் காண்பவர் கண்களில் காவியங்களைப் படைத்துக் கொண்டிருந்தன.

இந்த ஓவியப் படைப்புகளுக்குப் பின்னால் ஒரு காவியம் கருக்கூட்டிக்கொண்டிருந்தது.

கதிரைமலைச் சிவன்கோவிற் பின்புறச் சுற்றுவீதியில், கோவிற்சுவரை அண்டினாற்போல், அடர்ந்து மதர்த்துக் கவிந்து வளர்ந்திருந்தது ஒரு நாவல் மரம். அந்த நாவல் மரத்தடியிலே கிடந்த ஒற்றைக் கல்லிருக்கையில், நாடியில் கையூன்றியபடி சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறான் ஒரு

நடுப்பகலாக இருந்தாலே வெய்யில் நுழைய அஞ்சுவது போல், ஒரு சில ஒளித் துளிகளே உள்ளே சிதறிக் கிடக்கும், அந்தச் சிவன் கோவில் மேற்கு வீதிக் காடும், நாவல் மரத்தடியும் பொழுது சாய்ந்துவிட்டதால், இருளத் தொடங்கிவிட்டது: அடர்ந்த மரங்களிடையே அங்கொன்றும் இங்கொன்றுமாக, நகரும் ஊர்வனவற்றின் ஊரலால் இலைச் சருகுகள் அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தன. காட்டுப் பறவைகளின் ஓசைகளும் தூரத்தே வழுக்கையாற்றின் மீது குடிகொண்டுள்ள புள்ளினங்களின் அலம்பலும் ஒருவித பயவமைதியை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

இந்த இளைஞனுடைய முகத்திலே கடுதி (அவசரம்) தெரிந்தது. இன்னும் ஏன் காணவில்லை என்கிற எதிர்பார்ப்பின் சாடை தெரிந்தது.

கோவில் வெளிமாடத்துத் தெற்குச் சுவரிலிருந்த சிறிய சாளரம் ஊடாக, தூண்டாமணி விளக்கின் ஒளிக்கீற்று ஒன்று தெறித்துப்போய், நெடுஞ்சாலையில் இருந்து கோவிலுக்கு வரும் நடைவழியைத் தொட்டுக் காட்டிக்கொண்டிருந்தது:

நேரமாகிவிட்டதை உணர்ந்த இளைஞன் எழுந்தான். அவனுடைய இடையில் இருந்த வாள் கல்லில் தட்டுண்டு "டங்" என்று ஒலி எழுப்பியது. அவ்வொலியைக் கேட்டுக் கலைந்த காட்டுப் பறவைகள் சலசலப்பை ஏற்படுத்தின. அவ்வேளையில், அந்நடைவழியில் விரைந்து வருகின்ற சில குதிரைகளின் காலடி ஒலிகள் கேட்டன. இளைஞன் கூர்ந்து காதைக்கொடுத்தான். குதிரைகளின் விரைவான ஓட்டத்திலிருந்தும் காலடி ஒலிகளின் எண்ணிக்கைகளில் இருந்தும் தன் நண்பர்கள் வருவதைப் புரிந்துகொண்டு அமைதியானான்.

வந்த இளைஞர்கள் அந்த இருட்டிலும் அங்கே நிற்பவன் தங்கள் நண்பன் தான் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

இளைஞனே! நீண்ட நேரம் காத்திருந்திருப்பாய் என்று எண்ணுகின்றேன், வழியில் பல தடங்கல்கள் குறுக்கிட்டு விட்டன. இனி நாங்கள் இந்த இடத்தில் நின்று பேசக்கூடாது. கோவிலில் தங்கும் அடியார்களின் நடமாட்டமும் இருக்கும், கைக்கூலிகளும் நடமாடக்கூடும். வா! வயற்கரையில் போயிருந்து பேசுவோம் என்றான், தலைவன் போன்று தோன்றிய இளைஞன்.

உண்மைதான் இது உகந்த இடமல்ல என்று கூறிய இளைஞன், ஒருதடவை தன்னுடன் பேசியவனுடன் வந்தவர்களை நோட்டம் விட்டான். முகத்தில் திருப்தி தெரிந்தது. ஒரு முறுவலுடன் குதிரையில் பாய்ந்து ஏறினான். குதிரைகள் வயற்கரை செல்லும் நடைவழியில் காட்டினுள் மறைந்தன.

வயற்கரை வந்த இளைஞர்கள் குதிரைகளைக் காட்டோரத்தில் கட்டிவிட்டு, வரப்பினுள் நடந்து சென்று ஒரு குளத்தடியை அடைந்தார்கள்.

அந்த வெள்ளிருட்டில் கதிரவனின் பிரிவால் கூம்பிக் கிடந்த தாமரைகள் பளிச்செனத் தெரிந்தன.

ஒருபெருமூச்சு விட்ட இளைஞன்; நாங்கள் ஈழத்தமிழர்கள், எத்தனை நீண்ட நெடுங்காலமாக எங்களுடைய வரலாறு கூடத் தெரியாமல், வருகிற போகிற வாள்பிடித்த வேடரெல்லாம் இருக்கிறதையெல்லாம் அள்ளிக் கொண்டு போனாலும் கவலைப்படாமல், வாடாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். என்றைக்குத் தான் விழித்தெழப் போகிறோமோ என்று ஆதங்கத்துடன் கூறினான்.